★ விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 26 முஹற 25 இதழ் 272

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12—11—82

தீபாவளி மலிவு
விற்பனை!

★ காஞ்சிபுரம்-மணிப்புரி
★ வூலி-G 44 ★ பட்டுவேட்டி
★ சேட்டிங் ★ சூட்டிங்-பேபி சூட்
★ எல்லாநிற பிளவுஸ் பீஸ்கள்

நாதன் ரெக்ஸ்ரைல்ஸ்

179, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். தொலைபேசி: 23691
தலைமையகம்;
அன்னராஜா ஸ்ரோர்ஸ்
தொலைபேசி: 22608.
[5048]

சிறந்த சேவை!
நிறைந்த சலுகை!!
நிதான விலை!!!

ரைப்பிங், ரென்சில் கட்டிங், ரேனியோ ஆகியவை சிறந்த முறையிலும் குறுகிய காலத்திலும் செய்துகொள்ளலாம்.

தனியார் நிறுவனங்களுக்கு விசேஷ கழிவுண்டு.

''SHABRA''
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் (5127)

# சோவியத் அதிபர் பிரஷ்நெவ் காலமானர்!

## புதிய அதிபர் செவ்வாய்க்கிழமை தெரிவுசெய்யப்படுவார்

மாஸ்கோ, நவம்பர் 11

**சோவியத் ஜனதிபதி லியோனிட் பிரஷ்நெவ் தமது 75-வது வயதில் நேற்று காலமானர்.**

**சோவியத் யூனியனின் புதிய ஜனதிபதி செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

சோவியத் ஜனதிபதி பிரஷ்நெவ் உக்ரேனில், 1906ம் ஆண்டு டிசம்பர் 19ம் தேதி உருக்கு தொழிலாளிக்கு ஒரு மகனுகப் பிறந்தார். 1927ம் ஆண்டு விவசாய தொழில் கல்வி பயின்ருர்

### இரண்டாவது உலகப் போரில்

1931ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த பிரஷ்நெவ் 2வது உலகப்போரில், பிரிகேடியர் ஜெனரலானுர்.

1959ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் கமிட்டி உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு, 20வது மாநாட்டிலும் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டு அவர் அரசியல் தலைமைப்பீட உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். 1964ம் ஆண்டு கட்சியில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார்.

இன்று நடைபெறவிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில், ஜனதிபதி பிரஷ்நெவ், நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக முக்கிய உரையாற்றவிருந்தது குறிப்பிடத்தக்கது.

இறுதிச்சடங்குகள் பற்றிய விபரம் இதுவரை அறிவிக்கப்படவில்லை. பிரஷ்நெவின் பூதவுடல் பூரண அரசமரியாதையுடன் செஞ்சதுக்கத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

### 18 ஆண்டு சேவை

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக 18வருடகாலம் பணியாற்றியபிரஷ்நெவ் தமது 75வது வயதில் காலமானுர்.

[8- பக்கம் பார்க்க]

### குரோமிக்கோ புதிய அதிபர்

மாஸ்கோ, நவ. 11

சோவியத்தின் புதிய ஜனதிபதியாக வெளிநாட்டமைச்சர் குரோமிகோ தெரிவுசெய்யப்படலாம் என்ற கருத்து நிலவுகிறது (ஏ)

சர்வஜன வாக்கெடுப்பு:

## அவசரகாலநிலைமையைநீக்க 11 எதிர்க்கட்சிகள் கோரிக்கை

[கொழும்பு]

அவசரகால நிலைமையை நீக்கிவிட்டு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான 11 எதிர்க்கட்சிகள்கோரியுள்ளன.

சுதந்திரக்கட்சித் தலைமை அலுவலகத்தில் சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமா தலைமையில் நேற்று நடைபெற்ற 11 எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி ஆராயப்பட்டது.

அவசரகால நிலைமை நாட்டில் இருக்கும்போது எதிர்க்கட்சிகளின் பிரசாரத்திற்கு பாதிப்பு ஏற்படுமென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுடன் அவசரகால நிலைமையை நீக்கி விட்டு சர்வஜனவாக்கெடுப்பை நடத்துமாறு கோருவதென்ற தீர்மானம், ஏகமனதாக நிறைவேறியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடம், அனுப்பிய கடிதமொன்று கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. அக்கடிதத்தில் சர்வஜன வாக்கெடுப்பில் கூட்டணி தனியாக எதிர்ப்பிரசாரம் செய்யப் போவதாக கூறப்பட்டிருந்தது.

# யாழ். எம். பிக்களின் முடிவுபெருமல் திட்டமிடல்பகுதியினர் நிதி ஒதுக்கீடு?

## ஏழுஎம்.பிக்கள்போர்க்கொடி

### அபி. சபைக்கு பிரேரணை வருகிறது

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ் மாவட்டத்திற்கான 83ம்ஆண்டின் பன்முகபடுத்தப்பட்ட வரவு செலவு திட்ட வேலைகளுக்கு யாழ். மாவட்ட எம். பிக்களின் ஆலோசனை பெருமல், யாழ் செயலகதிட்டமிடல் பகுதியினர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை ஆட்சேபித்து, யாழ்,மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர உடபினர் ஒருவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளாராம.

1983ம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரை யாழ் மாவட்டத்திலுள்ள பதினெரு எம்.பிக்களில் ஏழு எம் பிககள் தமது தொகுதிக்கான திட்டங்களை இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

யாழ். செயலக திட்டமிடல் பகுதியினர் யாழ் மாவட்ட எம் பி.க்களது ஆலோசனையோ சம்மதமோ பெருமல், நிதி ஒதுக்கீடுகள் செய்ததாலே தத்தமது தொகுதிக்கான திட்டங்களை அனுப்பி வைக்காததற்குக் காரணம் என்று மேற்படி எம். பிக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள பதினெரு தொகுதிகளுக்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தலா 25 லட்சம் ரூபாவில் ஒவ்வொரு தொகுதி அபிவிருத்திக்கும்பதினெரு லட்சம் ரூபா வீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தொகையைக் கொண்டு எப்படிப் பாடசாலைகள் 'மின்சாரம், பாதைகள் போன்ற அபிவிருத்திவேலைகளைச் செய்ய முடியும் என்று எம் பி.க்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

பதினெரு தொகுதி ரீதியாக மகாதேவா தாம்போதிக்கு தலா 5 லட்சம் ரூபாவும், யாழ். ஆஸ்பத்திரி 4 மாடிக் கட்டிடத்துக்கு தலா 5 லட்சம் ரூபாவும், 82ம் ஆண்டுதொடர் வேலைகளுக்கு தலா 2லட்சம் ரூபாவும், பின்தங்கியதொகுதியான கிளிநொச்சித் தொகுதிக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும், மற்றும் அபிவிருத்தி

[8-ம் பக்கம் பார்க்க]

இன்று
மகத்தான 'திறப்புவிழா

அனிதா ஜுவல்லர்ஸ்,
இல. 48, ஆடியபாத வீதி, நல்லூர் மாக்கற்,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்!

12-11-1982 துந்துபி வருடம் ஐப்பசி மாதம் 26ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணி 5 நிமிஷம் தொடக்கம் 9 மணி 40 நிமிஷத்திற்குள் வரும் மிதுன லக்கின சுபவேளையில்

அனிதா ஜுவல்லர்ஸ்
Annitha Jewellers

என்னும் நகை வியாபார நிலையத்தின் வியாபாரத்தை ஆரம்பித்துவைக்கவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
கு. செல்வனேஸ்வரன்
உரிமையாளர்

5111

## சுங்க ஏல விற்பனை

16-11-82, 17-11-82 ஆகிய திகதிகளில் காலை பத்து மணியளவில் யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்திலும், ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்திலும் கீழ்க்காணும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

விற்பனை முழு நிபந்தனைகளும் 1954ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட 10675ம் இலக்க அரசாங்க வர்த்தமானி 1ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| பொருட்கள் | இடம் | திகதி |
|---|---|---|
| (1) சாரங்கள் காற்சட்டைத் துணிகள் சட்டைத் துணிகள் | யாழ்ப்பாணம் சுங்க அலுவலகம். | 16-11-82 |
| (2) இயந்திர வள்ளங்கள் கண்ணடி இழை வள்ளங்கள் | ஊர்காவற்றுறை சுங்க அலுவலகம் | 17-11-82 |

ஒப்பம்
எஸ். எம். ஜே. சேனுரத்ன,
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-11-82

5056

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கூடுதல் பலன் தரக்கூடிய நல்லஇன செவ்விளநீர் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 5104

காரைநகர் இந்துக்கல்லூரி விளையாட்டுத் திடலுக்குக் கிழக்குப் பக்கத்திலுள்ள எட்டுப் பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்க. க. அப்புத்துரை மாஸ்டர், ''மலர் இல்லம்'', அளவெட்டி தெற்கு, அளவெட்டி. 5121

புதிய NATIONAL VIDEO CASSETTE RECORDER விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு கிழமைகளில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும், N. சிவசிவபிள்ளை, (மில்க்வைற் சோப் தொழிற்சாலை முன்பாக) 566/4, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 5101

## தேவை

எமது வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தங்குமிட வசதிகள் இல்லை. நல்லூரிலுள்ள தொழிற்சாலைக்கு தினமும் வந்து போக வேண்டும். தேகஆரோக்கியமும், நல்லொழுக்கமும் உடையவர்கள் மட்டும் நேரில் சமூகமளிக்கவும். எஸ். சுப்பிரமணியம் அன் கொப்பனி, 191, (53), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5106

பின்வரும் இடங்களை நிரப்ப உடனடியாக தகுதி வாய்ந்தவர்கள் தேவை. Machine Operator (மெஸின் ஒப்பரேட்டர்), Asst Machine Operator (உதவிமெஸின்ஒப்பரேட்டர்), Trainee Mechanics (றெயினி மெக்கானிக், Sales Representatives and Canvassors (விற்பனை பிரதிநிதிகள்). ஆணி மெஸின், லேத் மெஸின் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவேண்டிய இறுதி திகதி: 22-11-82. முகவரி; Business Consultants, and Promoters Limited, No. 222 ] Hospital Road, Old No 76] Jaffna. 5117

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்
1983ம் ஆண்டிற்கான
வழங்குநர்களைப்
## பதிவு செய்தல்

மராமத்துப்பகுதி வேலைகளுக்குத்தேவையானபொருட்களை (கிறசர் சல்லிகள், கையினால் உடைத்த சல்லிகள், கண்டகல், சுண்ணும்பு, தேங்காய் மட்டை, கிடுகு, கிறசர் தூள், கிறவல் மக்க, மணல்) வழங்குவதற்கு தகுதியுடைய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையில் இடதுபக்க மேல்மூலையில் ''1983ம் ஆண்டுக்கு மராமத்துப் பொருட்கள் வழங்குநர் பதிவு', எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 26-11-1982.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
10-11-1982. 5126

## தவறிவிட்டது

5-11-82 நண்பகல் 1½ மணியளவில், ஆஸ்பத்திரிக்கு முன்னுலுள்ள ''ரோயல் பார்மசி''யில் மருந்து எடுக்கும்போது, எனது மருந்துவகைகளும் வைத்தியக் கருவிகளும் சில தஸ்தாவேஜுகளும்தவறிவிட்டன. கண்டெடுத்தவர் தயவுசெய்து நவாலி வடக்கு, கற்கேணியடி ஆயுள்வேத வைத்தியர் சி. கந்தையாவிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 5124

பின்னுறுதிக் கட்டளை
பற்றிய
## அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவில் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் இராமுப்பிள்ளை பெண் செல்லமுத்துவின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்
— மரணமெய்தியவ.

அம்பலவாணர் இராமுப்பிள்ளை, கோண்டாவில்.
— மனுதார்

வழ. இல. த / 3704

மேற்சொல்லப்பட்ட மரணசாதனவழக்கு மேற்குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 17ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982-ம் ஆண்டு கார்த்திகை ாதம் 5-ந் திகதி.
இந்நீதிமன்ற கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

என்னுல் வரையப்பட்டது.
சி. சிதம்பரநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
5105

## தேசிய ஜனநாயகக்கட்சி முன்னணியில்

புதுடில்லி, நவ. 11

நாகலாந்தில்நேற்று நடைபெற்ற சட்டசபைக்கான பொதுத் தேர்தல் முடிவுகளில் நாகலாந்து தேசிய சனநாயகக் கட்சியே முன்னணியில் நிற்கின்றது. (உ)

## மகளிர் விழா

[மன்னுர்]

மன்னுர்- வட்டக்கண்டல் ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் பாரதி நூற்ருண்டு விழாவை முன்னிட்டு இம்மாதம் 21ம் திகதி மகளிர் விழா நடைபெறும்.

ஜனுப். எம். எம். யூனைது தலைமையில் நடைபெறும் இவ் விழா விற்கான ஏற்பாடுகளை வட்டக்கண்டல் குடும்பநல சங்கச் செயலாளர் திரு. எஸ் நாகலிங்கம் மேற்கொண்டு வருகிருர்.

## சேமக்காலையில் தங்குமண்டபம்

[கரவெட்டி]

கரவெட்டி கத்தோலிக்கமக்களின் சேமக்காலையான கரவெட்டி கிரிப்பல்லியிலுள்ள சேமக்காலையில் தங்குமண்டபம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை உடுப்பிட்டி எம் பி திரு த இராசலிங்கம் மேற்கொண்டு வருகிருர்.

இதனைத்தொடர்ந்து பிரஸ்தாப தங்குமண்டபந்திற்கென 20,000 ரூபாவை பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுசெய்துள்ளார்.

## ஆசிரியர்கள் கருத்தரங்கு

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் உபவட்டார பாடசாலை ஆசிரியர்களுக்கான நான்கு நாள் கருத்தரங்கு மல்லாவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சுமார் 30 பாடசாலைகளை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

ஆசிரியர் மாணவர் பெற்ரூேர் தொடர்புகள் உட்பட விஞ்ஞான தொழில்நுட்ப கலை வர்த்தக பாடங்களில் விசேடமாக இக்கருத்தரங்கில் கருத்துப்பரிமாறப்பட்டது.

இக்கருத்தரங்க முல்லைத்தீவு மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வீ. கே. நல்லையா ஆரம்பித்து வைத்தார்.

மாங்குளம் உப வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற இதில் கல்வி அமைச்சு, கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பின்னுறுதிக் கட்டளை
பற்றிய
## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கச்சேரி-நல்லூர் வீதியைச்சேர்ந்த ஆஸ்டின் இராஜநாயகம் பிறெக்கென்றிட்ஜ் என்பவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்.
-மரணமெய்தியவர்

பிறெக்கென்றிட்ஜ் கைம்பெண் பதுமசுந்தரி, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம்.
-மனுதார்

மரணச்சொத்து )
நியாயாதிக்கம் ) இல. 3696

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கானது மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரால் மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்கள் மீதான நிர்வாக தத்துவங்கள் பெறுவதற்காக இந் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதில் அதற்கிணங்கம் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு அல்லதுஅதற்கு முன்னர் இந் நீதிமன்றத்தில தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்ருர்.

1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

தா. குலஞானம்,
பதிவாளர்.

தயாரித்தது:
L. B தம்பிராஜா,
மனுதாரின் சட்டத்தரணி.
5115

## மரங்களின் முக்கியத்துவம்

(மன்னுர்)

சுற்றுடல்களில் மரங்களை நாட்டுதல் மூலம் சுத்தமான காற்றைம் பெறுவதோடு சுற்றுடலையும் பாதுகாக்க முடியும் மன்னுர்- வட்டக்கண்டல் ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்ற சுகாதாரமும், சுற்றுடல் பாதுகாப்பும் என்ற தலையங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னுர் மாவட்ட குடும்பநல அதிகாரி திரு. ஜே கமலாகரன் தெரிவித்தார். அவர் தமதுரையில் கூறியதாவது.

''நாம் எமது வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது போல் சுற்றுடல்களையும், வீதிகளையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். பெற்ரூேர்கள் பிள்ளைகளுக்குப் போசாக்கு நிறைந்த உணவுகளை ஊட்டி பேணிவளர்க்கவேண்டும்.

கீரை வகைகளில் இருந்தும் மரக்கறி வகைகளிலிருந்தும் குறைந்த விலையில் நிறைந்த போசாக்குள்ள உணவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டின் சுகாதாரத்தைப் பேணுவதற்காக உலகில் பல லட்சம் ரூபா செலவிடப் பட்டது. கிராமப்புறங்களை முதலில் சுத்தமாக வைத்திருந்தால் நகர்ப்புறங்கள் தாமாகவே சுத்தமாகி விடும் என்ருர்.

## தொல்புரம் கமநலச்சேவை உழவு இயந்திர சாரதி பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விபரங்களையும் கமநலச்சேவை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி: 4-12-1982. வட்டுக் கோட்டைத் தொகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பெரும்பாக
உத்தியோகத்தர்,
சமநலச் சேவை நிலையம்,
(5120) தொல்புரம்.

## நற்செய்தி கூட்டம்

நாளை 13-ந் திகதி காலை 155-ம் கட்டை
கிளிநொச்சி ஜெப ஆலயத்தில்
நற்செய்தி கூட்டம்
சகோ. செ. இராசேந்திரம், சகோ. சந்தனப்பிள்ளை
கலந்துகொள்வர்.
(5136) தகவல்: அ. நமசிவாயம்.

## புத்தகக் கண்காட்சி

காலம்: 1982 நவம்பர் 18, 19, 20, 21
காலை 9-00 — மாலை 6-00 மணி வரை
இடம்: மறைக்கல்வி நிலையம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

★ அறிவூட்டும் ஆழ்கடல் முத்துக்கள்
★ ஆன்மாவிற்கு நிறைவூட்டும் ஞானக்களஞ்சியங்கள்
★ ஆண்டவரின் அருள்வாக்கை அன்றுடம் கேட்டு நிறையருள் பெற்றிட வருக.

(5107)

## லெனினும் ஆசியாவும்

தேசிய சுதந்திரம், தேசிய இனங்களின் விமோசனம்,
சமாதானம், சோஷலிஸம்
ஆகிய லெட்சியங்களுக்காகப் போராடும்
சகல உழைக்கும் மக்களுக்கும் ஆத்மீக ஆயுதமாக
இருப்பது மார்க்ஸீய அறிவாகும்.
இவ்வறிவைப் பெற பழம்பெரும் புரட்சிவாதிகளில்
ஒருவரான
வழக்கறிஞர் த. துரைசிங்கம் எழுதிய
''லெனினும் ஆசியாவும்'
என்ற நூலைப் படியுங்கள்.
இந்நூல் மக்கள் பிரசுராலயம்,
46, சிவன்கோவில் வடக்கு ரோட், யாழ்ப்பாணம்
மற்றும் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
விலை ரூபா 10/-
சோஷலிஸ ஆய்வுக் கழகம்,
31, வில்சன் வீதி. கொழும்பு 12.
(5125)

மீட்கப்படாத அடைவுப் பொருட்களின்
## ஏல விற்பனை

மக்கள் வங்கி நெல்லியடிக் கிளையில்
1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 06-ந் திகதி வரை
அடைவு வைக்கப்பட்டு 1982-ம் ஆண்டு
டிசம்பர் மாதம் 03-ந் திகதி வரை மீட்கப்படாத
நகைகள் யாவும்
1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05-ந் திகதி
காலை 10-00 மணியளவில் நெல்லியடி மக்கள் வங்கிக்
கிளைக் கட்டிடத்தில் வைத்துப்
பகிரங்க ஏலத்தில்
விற்பனை செய்யப்படும் என்பதனை
அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக்காரியாலயம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
05-11-1982. (5096)

## இந்தோனேஷியா ஜனதிபதி தேர்தல்:

# பொதுவேலைநிறுத்தம் செய்ய தொழிலாளர்கள் நடவடிக்கை

ஜகார்த்தா, நவ. 11

அடுத்தமாதம் நடைபெறவுள்ள இந்தோனேஷியாவின் ஜனதிபதி தேர்தலை முன்னிட்டு நாட்டில் பாதுகாப்பினை ஏற்படுத்துவதில் தேசிய பாதுகாப்புப்படை தீவிரமாகச் செயல்படும் என்று தேசிய பாதுகாப்பு படைத் தளபதி அட்மிரல் சுதோமோ அறிவித்துள்ளார்.

ஜனதிபதித்தேர்தல் காலத்தில் இந்தோனேஷியாவில் உள்ள தொழிற்சங்கவாதிகள் பொதுவேலைநிறுத்தம்போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஆதரவு திரட்டிவருகிருர்கள்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது பற்றி அட்மிரல் சுதோமோ தொழிசங்கத் தலைவர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்;

நாட்டின் ஜனதிபதி தேர்தலை முன்வைத்து நடைபெறவுள்ள சகல தொழிற்சங்க நடவடிக்கைகளையும், என் செயல்களையும் எந்த வழியிலும் தேசியபாதுகாப்பு படையினர் அழிந்துவிடுவார்கள்.

வேலைநிறுத்தம் தொழில் தருவோருக்கும், தொழிலாளர்களுக்கும், தேசநலனுக்கும் பாதகமான நடவடிக்கையாகும் இதனைவிடுத்து சுமுகமான உறவுமுறையில் தொழிலாளர்கள் தமது பிரச்சனைகளைத் தீர்க்க முன்வர வேண்டும். என்றும் அட்மிரல் சுதோமோ தெரிவித்துள்ளார். (உ)

# போலந்தில் வேலை நிறுத்தம் முறியடிக்கப்பட்டது!

வார்ஸோ, நவ. 11

போலந்தின் சொலிடாறிற்றி தொழிற்சங்க தலைவர்களினுல் நடாத்தப்பட்ட எட்டு மணி நேர பொதுவேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம், ஊர்வலங்கள் மீது போலந்தின் இராணுவ அரசின் பொலிஸ்படையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை பிரயோகித்து முறியடித்துள்ளதாக போலந்து அரசு தெரிவித்துள்ளது.

தலைநகரானவார்ஸோவிலும் ஹாக்கோ நகரிலும் மாணவர்கள், ஆர்ப்பாட்ட தொழிற்சங்கவாதிகள் மேற்கொண்ட கலகங்கள், ஆர்ப்பாட்டங்களை, பொதுக்கூட்டங்களை முறியடிப்பதற்காக பொலிஸ் படை உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ)

## ஸிம்பாப்வே

# மத்தியஸ்தர்களின் தீர்ப்பு: காப்டன்மென்டிஸ் அதிருப்தி

## ரஞ்சன் மடுகல்லவுக்குகண்ணில்காயம்

லண்டன், நவ. 11

ஸிம்பாப்வே மத்தியஸ்தர்களின் தீர்ப்புகள்குறித்து இலங்கை காப்டன் டுலிப் மென்டிஸ் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஸிம்பாப்வே கிரிக்கெட் சபைத்தலைவருக்கு காப்டன் மென்டிஸ் முறைப்பாடுசெய்துள்ளார்.

ஸிம்பாப்வேவுடனுன முதலாவது இரண்டு நாள் உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் பந்தயத்தின்போது இலங்கை வீரர்களின் 'அப்பீல்'களுக்கு சிறந்த முடிவுகளை மத்தியஸ்தர்கள் வழங்கவில்லையென்றும், பாதகமான முடிவுகளே வழங்கப்பட்டவற்றில் அநேகமானவையென்றும் மென்டிஸ் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க இறுதியாக நடைபெற்ற உத்தியோகபூர்வமற்ற நான்கு நாள் டெஸ்ட்பந்தயத்தில் துடுப்படி வீரர் ரஞ்சன் மடுகல்லவுக்கு கண் இமையில் காயமேற்பட்டது. ஸிம்பாப்வே வீரர் ஒருவரின் பந்து வீச்சினுல் ஏற்பட்ட இக்காயத்துக்கு ஆறு தையல்கள் போடப்பட்டன. (கி)

# கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம் வெளியேறவேண்டும்!

## பாகிஸ்தான் - மலேஷியா வேண்டுகோள்

கோலாலம்பூர், நவ. 11

''கம்பூச்சியாவில் நிலைகொண்டுள்ள வியட்நாமியப் படைகளும், ஆப்கானித்தானில் நிலைகொண்டுள்ள சோவியத்படைகளும் உடனடியாக கம்பூச்சியாவையும் ஆப்கானித்தானையும் விட்டு வெளியேறவேண்டும். இவ்விருநாடுகளின் சுதந்திரமும், இறைமையும் நிலைநாட்டப்பட வேண்டும்.''

பாகிஸ்தானும், மலேசியாவும் கூட்டாக விடுத்த சர்வதேசப்பிரச்னைகள் தொடர்பான அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளன.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

''இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கொள்கையும் – வன்முறைகளும் உடன்நிறுத்தப்பட்டு மத்தியகிழக்கில் அமைதி உறுதிப்படுத்தப்படவேண்டும். பாலஸ்தீனியர்களுக்குச் சுதந்திரமான தாயகம் அமைப்பதன் மூலமே அவர்களின் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இக்கூட்டு அறிக்கையை மலேசியப் பிரதமரும், பாகிஸ்தானிய ஜனதிபதியும் வெளியிட்டுள்ளனர். (உ)

## வெளிநாடுகளில்

# அமெரிக்கர்களின் குற்றச்செயல்கள்

வாஷிங்டன், நவ. 11

இன்று உலகில் உள்ள 32 நாடுகளில் அமெரிக்காவுக்கு 1500 ராணுவத் தளங்களும் ராணுவ வசதிகளும் உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் துருப்புக்கள் வெளிநாடுகளில் நிலைகொண்டுள்ளன. வெளிநாட்டு விடயங்களில் அமெரிக்கா கொண்டுள்ள ஆர்வம் அந்நாடுகளில் பெரும் பிரச்னையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க ராணுவம் இந் நாடுகளில் அபாயகரமான குற்றங்களை இழைத்துள்ளது.

களவு, கொள்ளை, தாக்குதல், கொலை போன்றவற்றை வெளிநாடுகளில் அமெரிக்கர்கள் மேற்கொண்டுள்ளனர். இவை இவ் வீரர்களின் 'பொழுதுபோக்கு' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ், ஜப்பான், துருக்கி ஆகிய நாடுகளில் இவை சகஜமானவை. 140 அமெரிக்க ராணுவத் தளங்களும் வசதிகளுமுள்ள ஜப்பானில் கடந்த 25 ஆண்டுகளில் 150,000 குற்றங்களை அமெரிக்க வீரர்கள் இழைத்துள்ளனர்.

ஜப்பானில் இன்று அமெரிக்கத் துருப்புகளுக்கெதிராகவும் அமெரிக்கத் தளங்களுக்கெதிராகவும் மக்களின் குரல் மேன்மேலும் ஓங்கிவருகின்றன.

# உணவு, மருந்து உட்கொள்ள விஞேபாஜி மறுக்கிருர்!

புதுடில்லி நவ. 11.

ஆச்சார்ய விஞேபாவேயின் உடல்நிலை, வழமையான நிலையில் உள்ளது.

உணவோ, மருந்துகளோ உட்கொள்ளக் கடந்த இரு தினங்களாக விஞேபாவே மறுத்து வருகின்றபோதிலும் உடலில் வேறு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று பர்ஞர் ஆச்சிரம மருத்துவஅறிக்கை கூறுகிறது.

பாரதப்பிரதமர் திருமதிஇந்திரா காந்தி உட்பட பாரதத்தின் பல்வேறு தலைவர்களும் ஆச்சார்ய விஞேபாவைப் பார்வையிட்டுச் சென்றனர்.

விஞேபாஜி : பூரணசுகத்துக்காக பிரார்த்தனை செய்யுமாறு பர்ஞர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த நிர்மலாதேஷ் பாண்டே வேண்டுகோள்விடுத்துள்ளார். (உ)

# மக்கள் சபையில் அங்கத்துவம்கோரி விண்ணப்பம்

லண்டன், நவ 11

பிரித்தானிய மக்கள் சபையிலும், பிரபுக்கள் சபையிலும் அங்கத்துவ உரிமைகோரி ஆங்

(7-ம் பக்கம் பார்க்க)

# ✯ போக்லாந்து யுத்தத்தில் உயிர்நீத்த சார்ஜண்டுக்கு உயர் இராணுவ விருது!

லண்டன் நவ, 11

போக்லாந்து யுத்தத்தில் ஆர்ஜென்டீனுவின் படைப்பிரிவொன்றை முறியடிப்பதில் பெரும்பங்கு வகித்து உயிர் துறந்த பிரிட்டனின் பாரசூட் சார்ஜண்ட் ஒருவருக்கு விக்டோரியா குரோஸ்' என்றழைக்கப்படும் பிரிட்டனின் அதி உயர்ந்த இராணுவ விருது வழங்கப்பட்டது.

இந்த வீரரின் மனைவியான மரிகா மக்கே இவ்விருதினைத் தமது கணவரின் சார்பில் பெற்றுக்கொண்டார்.

பக்கிங்ஹாம் மாளிகையில் நடைபெற்ற வைபவமொன்றிலேயே எலிசபெத் மகாராணியார் இவ்விருதினைக் கையளித்தார். இறந்த வீரருக்கு இரு பிள்ளைகள் உள்ளனர்.

மகாராணியார் விருதை வழங்கிப் பேசுகையில் கூறியதாவது; ''வீரர் இயன்குறித்து நாம் பெருமையடைகிருேம். ஆனுல் இவ்வேளை அவர் தமது விருதினைநேரடியாகப்பெற்றுக் கொள்ள முடியாததையிட்டு பெருங்கவலை ஏற்படுகின்றது'' என்ருர். (கி)

# பாகிஸ்தான் நகர்மயமாக்கல்

## பற்றி சோவியத் நிபுணரின் கருத்து

இஸ்லாமாபாத், நவ. 11

பாகிஸ்தானின் நகர்மயமாக்கலின்பிரச்னைகள் குறித்து வி. பெலொக். ரெனிட்ஸி என்ற சோவியத் நிபுணர் எழுதியுள்ள நூல் ஒன்று இங்கு வெளியாகியுள்ளது.

மிக நீண்டகாலமாக பாகிஸ்தானின் பொருளாதாரத்தையும் சமூகவியலையும் பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்ட இந்த நிபுணர் பாகிஸ்தானின் ஜனத்தொகை வளர்ச்சிப் பிரச்னை மீது அதிக அக்கறை காட்டுகிருர்.

''சுதந்திரமடைந்த ஆரம்ப காலத்தில் பாகிஸ்தானின் பொருளாதாரம் மிகமிகப் பின்தங்கியதாகவிருந்தது. மிகச்சிறிய தொழில்துறையும் வளர்ச்சிபெருத தொழிலகங்களுமே நீண்டகால காலனி ஆட்சியின் விளைவாக விவசாயம் பலநெருக்கடிகளைக் கொண்டிருந்தது. கிடைக்கக் கூடிய மனித சக்தி வளத்துக்கும் பின்தங்கிய பொருளாதார வாய்புகளுக்குமிடையிலான வேறுபாடுகளால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது

வேலையில்லாத் திண்டாட்டம் முதலில் கிராமப்புறங்களில் தோன்றி, பின்னர், நகர்ப்புறங்களுக்குப் பரவியது. எனவே நகரப்புறங்களில் ஜனத்தொகை அதிகரிப்புத் தோன்றியது. இதன்விளைவாக நகரங்களில் சேரிகள் தோன்றலாயின. வறுமையும், சுகாதார சீர்கேடுகளும் மலிந்தன. இவ்வாறு இந்த நிபுணர் தமது நூலில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் நகர்ப்புற வளர்ச்சி, கட்டடக்கலை, வீடுகளின் அமைப்பு நாட்டுப்புறத்துக்கும் நகரப்புறத்துக்குமிடையிலுள்ள இடைப்பட்ட பகுதிகள் குறித்தும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

நகர்ப்புற ஜனத்தொகையின் அடர்த்தியில், பாகிஸ்தான் இதர ஆசிய நாடுகளின் நகர்களை மிஞ்சிவிட்டது என்றும் இந்த நிபுணர் குறிப்பிடுகிருர். பொதுத்துறையின் கீழான தொழில்துறைகள் தொடர்பாக பாகிஸ்தானிய நகரங்களின் வாழ்க்கையில் முன்னேர்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொழிலகங்களுக்கருகே தொழிலாளர் குடியிருப்புக்கள் நிர்மானிக்கப்படுவதானது பல பிரச்னைகளைத் தீர்த்து வைக்கக்கூடியதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிங்கை - சென்னை விமானச் சேவை

புதுடில்லி, நவ, 11

சிங்கப்பூர்-சென்னை விமானச் சேவை தொடர்பாக நேற்றுப் புதுடில்லியில் புதிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானது.

இதன்படி, சென்னையில் இருந்து இந்தியன் ஏயர் விமான சேவையினர் சிங்கப்பூருக்கு வாரந்தோறும் மூன்று விமானச்சேவைகளையும், சிங்கப்பூர் விமானச்சேவை வாரத்துக்கு 3 விமானச்சேவைகளைச் சென்னைக்கும் நடத்தும்.

இவ் விமானச் சேவைகள் அடுத்தாண்டுஏப்ரல் 1ந் திகதி முதல் செயல்படவுள்ளன. தற்போது வாரத்துக்கு இரு விமானச் சேவைகளே சென்னைக்கும் சிங்கப்பூருக்கும் இடையே நடைபெறுகிறது. (உ)

## மீட்கப்பட்டோருக்கு வேலை வாய்ப்பு

சேலம், நவ. 11.

அண்மையில் ஆந்திரமாநிலம் மத்தியமாநிலம் ஆகிய பகுதிகளில் கொத்தடிமைகளாக இருந்து மீட்கப்பட்ட 138 பேரின் நலனைப் பேணவும், தொழில் வாய்ப்பளிக்கவும் ரூபா 7 லட்சத்து 50 ஆயிரம் செலவில் கல்லுடைக்கும் தொழிற்சாலைக்கூட்டுறவுச்சங்கம் அமைக்கப்படும்.

இத்தொழிற்சாலை சேலம் மாவட்டத்தில் ஓமந்தூரில் அமைக்கப்படும். மீட்கப்பட்ட கொத்தடிமைகளாக இருந்தோர் தற்பொழுது சேலம் மாவட்டத்தில் குடியேற்றப்பட்டு வருகின்றுர்கள். (உ)

### மணிவாக்கு

கடும் சினத்தால் மனிதர்க்கு அறிவின்மை உண்டாம். ஆசாரமின்மையால் அறத்திருக்கேடு உண்டாம். அளவின் மிக்க ஆசாரத்தால் மூர்க்கத்தனமுண்டாம்.

— சுக்கிரநீதி

# நமது நோக்கு

## (யம) வான் நடத்திய இறுதி யாத்திரை

கதிர்காமயாத்திரையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய பத்துப் பேருக்கு காலன் நெடுஞ்சாலையில் காத்திருந்தான்.

பத்துப்பேர் பலியானோர்; மற்றும் பலர் கடுங்காயம் அடைந்தோர். கொழும்பு திரும்பிக்கொண்டிருந்த பிரயாணிகளின் 'யம வான்' நிகழ்த்திய சோக நாடகம் இது.

இ. போ. ச. போட்டியின்றித் தனிச் சேவையை நடத்தியபோது இவ்வித நாடகப் போட்டி அதற்குள்ளேயே நடந்து வந்தது; இன்று தனியார் 'வான்' சேவை அதற்குப் போட்டியாக அமைந்திருக்கிறது.

போட்டியின் கொடூரம் எவ்வாறிருந்தாலும், யாத்திரீகர்களை ஏற்றிவந்த வாகனம், ஒருவர் இருவரை அல்ல பத்துப் பேரைப் பரலோகம் அனுப்பிய செய்தி மக்கள் அனைவருக்கும் சோகத்தின் சிகரத்தைத் தொட்டுக்காட்டும் தன்மையது.

எமக்கு முதற்பட்டது; யாத்திரிகர்கள் இவ்வித அபாயமான வாகனங்களில் பயணஞ்செல்லும் பரிதாப நிலைமை.

எங்கும் அசுரவேகமென்றால், அது யாத்திரைக்கு எக்காரணங்கொண்டும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல,

இரண்டாவதாக யாத்திரை காரணமாகவே குடும்பம் ஒன்று ஒருமித்துப்போக நேரிட்டது; இறந்த ஒன்பது பேர் ஒரு குடும்பத்தவர் என்றால் கதிர்காமக் கந்தனின் கருணை எங்கே?

தனிப்பட்ட பத்தாவது மனிதன் ஏழு மாதப் பிள்ளை உட்பட நான்கு பிள்ளைகளையுடைய ஒரு இளம் குடும்பத் தலைவன். தலைவனை இழந்த மனைவியும் பிள்ளைகளும் கண்ணீர் வடிக்கும் காட்சி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இதனைக் கண்ணுறும் பகுத்தறிவுள்ள மனிதன் எவனும் இவ்வித சோரச் செயலுக்கு ஒருவன ஆளாவானென்பதை நம்பமாட்டான்.

இதுபோன்ற பயங்கர விபத்து அண்மையில் நடைபெறவில்லையென்றாலும், வான் – பஸ், வான்–மோட்டார் சைக்கிள் போன்ற விபத்துக்கள் இந்நாட்டில் சர்வசாதாரணமாய் விட்டன.

வேக வாழ்வே மூலகாரணம்; அதனைத் தடுக்க அரசாங்கம் அதிகார மற்றது. சாரதிகளைக்கட்டுப்படுத்துவதும் வாகனங்கள் பதிவுசெய்வதில் கண்டிப்பைக் கடைப்பிடிப்பதும் ஓரளவிற்குத்தான் உதவும்.

மற்றவர்களைத் தட்டி விழுத்தி தான முந்திவிட வேண்டுமென்ற சுபாவம் போட்டியை அத்திபாரமாகக்கொண்ட சமூகத்தின் அடிக்கல் எனலாம். அது தான் எங்கள் இன்றைய சமுதாயவாழ்வு.

இந்த வேதாந்தம் ஒருபுறமிருக்க கட்டுப்பாடற்ற வான்சேவைக்கு முற்றுப் புள்ளிவைக்க அரசாங்கம் தாமதிக்கலாகாது.

குறிப்பிட்ட வன், சேவை நிபந்தனைகளை அனுசரித்திருக்கின்றதா? சாரதியின் ஓட்டம் விபத்துக்கு வழிகோலியதா? வேறு விசேட காரணங்கள் என்ன?

இவ்வித வான் – பஸ் போட்டி நாட்டின் பல பாகங்களிலும் அதிகரித்து வருவதால் அதனைத் தவிர்க்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்; இவ்வித ஆராய்ச்சி அவசரமானது.

அரசாங்கத்துக்கு நாம் கட்டளையிடுவதோ ஆலோசனை கூறுவதோ நிலைமையைத் திருத்திவிடுமென நினைத்தல் மடமை.

சட்டுப்பாடுள்ள ஒரு சமுதாய பண்புநாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வருவது மக்களின் கடமை 'கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு' என்பதுபோல வாகனங்களின் 'கோத்திரமறிவது' பிரயாணிகளின் இன்றைய பெரும் பொறுப்பு.

# சர்வஜன வாக்கெடுப்புக்கு மேலதிக வாக்குச் சாவடிகள்

## ஜனாதிபதிதேர்தலைப்போன்று பாதுகாப்பு, பிரசார ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது இருந்ததைவிட சர்வசன வாக்கெடுப்புக்கு 10 அல்லது 15 வாக்களிப்பு நிலையங்களை மேலதிகமாக அமைப்பதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

சர்வசன வாக்கெடுப்பின் போது வாக்களிப்பு நிலையங்களில் நெருக்கத்தை குறைப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படஇருப்பதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின்போது சில மாவட்டங்களில் வாக்களிப்புநிலையங்கள் போதாமை இருந்ததை கவனத்திற்கொண்டே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலின்போது 6985 வாக்குச் சாவடிகள் இருந்தன. இத்தொகை 7 ஆயிரம் ஆக அதிகரிக்கப்படஉள்ளன.

ஜனாதிபதித் தேர்தலைவிட இத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமல்ல நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கூடுதலான மக்கள் வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

### பாதுகாப்பு நடவடிக்கைகள்

ஜனாதிபதித் தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளே இத்தேர்தலின்போது மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கு கொழும்பில் அமைக்கப்பட்ட பொலிஸ் செயலகம் தொடர்ந்து இயங்கி வரும் என்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரும் தேர்தல் பொலிஸ் பாதுகாப்பு செயலகத்தின் பொறுப்பதிகாரியுமான திரு. ஆர். சுந்தரலிங்கம் கூறினார்.

### வானொலி தொலைக்காட்சி பிரசாரம்

ஜனாதிபதித் தேர்தலைப் போன்றே அரசதரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படஉள்ளது. அரசாங்கக் கட்சியுடன் 12 எதிர்க்கட்சிகளுக்கும் இந்த பிரசாரத்திற்கு அனுமதி வழங்கப்படும்.

## சித்திரக் கைப்பணி நிலையம்

(யாழ்ப்பாணம்)

பனம்பொருள் அபிவிருத்தி சபையால், பனம்பொருள் சித்திரக் கைப்பணி நிலையம் ஒன்று அரியாலையில் அமைக்கப்படவுள்ளது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. எம். இராமலிங்கம் இம்மாதம் 19ம் திகதி பிற்பகல் இந்த நிலையத்தை திறந்துவைக்கவுள்ளார்.

பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராசா உட்பட பலர்கலந்து கொண்டு உரைநிகழ்த்துவர். (மா)

## யாழ். மரக்கறி சந்தையும், நகரின் சுகாதாரமும்

சென்ற சிலதினங்களுக்கு முன் யாழ் மரக்கறி மார்க்கெட்கள் குத்தகை விபரம் கேட்டு பத்திரிகையில் வந்த விளம்பரம் கண்டு வியப்படைந்தேன். சுமார் ஒரு லட்சம் ரூபாவரை கேள்விக் குத்தகை கேட்டு வாங்கும் பணத்தில் ஓர் பகுதியையாவது அதற்குச் செலவிடுகிறார்களா என்றால் இல்லைஎன்றே கூறவேண்டும்.

இது மழைகால மாதலால் நேரில் சென்று பார்த்தவர்களுக்குத் தெரியும் எந்த நிலையில் மரக்கறிச் சாமான்கள் வைத்து விற்கிறார்கள் என்று! நடைபாதைகள் எப்படியிருக்கின்றன. மேலே கட்டப்பட்டிருக்கும் சாக்குகளும் பொலித்தீன் துண்டுகளும் அதிலிருந்து ஒழுகும் அழுக்கு நீரும் ஒருபுறம், மழைக்கு குடைபிடிக்க முடியாத அளவில் பதித்துக் கட்டப்பட்டிருக்கும் கயிறுகள், ஒருபுறம், நடைபாதையில் வைத்து விற்பனைசெய்வோர் மறுபுறம். ப்ழுதடைந்த மரக்கறிகளையும் இலைகளையும் நடைபாதையில் போட்டு நாற்றமெடுக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் பொதுமலசலகூடம் இல்லாக்குறை இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. குதிரை லாயத்தில் குடிகொண்ட சந்தை இன்றும் குப்பை மேடாகத்தான்இருக்கிறதென்பதை அங்கு சென்று பார்ப்பவர்களுக்குத் தெரியும்.

தரம்கெட்ட மரக்கறிச் சாமான்கள் குறைந்தவிலையில் சைவ சாப்பாட்டுக்கடைகளுக்குப் போய்ச்சேர்வதை சந்தைக் குத்தகைகாரரோ மாநகரசபையோ, அன்றி சுகாதார பரிசோதகர்களோ அறியமாட்டார்களா? அல்லது தெரிந்தும் தெரியாதவர்கள் போல் இருக்கிறார்களா?

பூக்கடைபோல் இருக்க வேண்டிய வாழைப்பழக்கடை சாக்கடைபோல் இருப்பது இதுவரை மேலிடத்தவர்களின் கண்களில் தெண்படவில்லை என்று கூறிவிடமுடியாது.

கன்னாதிட்டிச்சந்தியில்கட்டப்பட்டிருந்த மலசலகூடம் அகற்றப்பட்டதால் சிறு ஒழுங்கைகள் மலசலகூடமாகப் பாவிக்கப்படுவதும் மலசலகூடம் அற்ற கடைகளில்வியாபாரம் செய்ய அனுமதித்ததும் பெரும் குறையாகும். காலை முதல் மாலைவரைதங்கி வியாபாரம் செய்பவர்கள் என்ன செய்வார்கள் என்ற கேள்வி இது வரை மாநகரசபையின் கவனத்துக்கு வராதது கவலையளிப்பதாகும்.

மேலும்சத்திரத்தை இடித்து அவ்விடத்தில் கட்டப்பட்ட கடைகளின் மேல்சிற்றிலிருந்து முகட்டுத்தண்ணீர் கிணற்றில் வீழ்கிறது அக்கிணற்று நீரைத்தான் பெரியகடை மக்கள் குடிநீராகப் பாவிக்கிறார்கள் என்பது யாருக்குத்தெரியும்?

தனியார் காணிகளிலிருந்து அழுக்கு நீர் வீதியில் ஓடுவதும் சிறுவர்கள் வீதியோரத்தில் மலம்சழிப்பதும், ஏன் வர்த்தக உரிமையாளர்கள் கூட சிலர் இம்மாதிரி நடந்துகொள்ளும் போது நகரம் எப்படி சுத்தமாக இருக்கும்?

சுற்றுலா பிரயாணிகளை வரவழைக்கவும் காக்கைதீவில் விளையாட்டரங்கு கட்டுவதற்கும் திட்டங்கள் போடப்படும் இக்காலத்தில் மேலேகுறித்த நிலைமைகளை முதலில் சீர் செய்ய வேண்டாமா?

அல்பிறெட் துரையப்பா விளையாட்டரங்கே இந்த நிலையில் இருந்தால் காக்கைதீவில் கட்டியென்னசருவாடா காயப் போடப் போகிறார்கள்? சிந்தித்து செயல்படவேண்டியது அதி முக்கியமான விடயமாகும்.

அ. செல்வரத்தினம்.
தென்மயிலை,
தெல்லிப்பழை.

## மாதரின் மகத்தான உதவி

சமுதாயத்தில் செம்பரிதியாக விளங்குபவர்கள் பெண்கள்.

கிராமங்களில் மக்களிடையே புத்துணர்ச்சி ஊட்டவும், ஆக்கப்பணிகளில் ஊக்குவிக்கவும் நாட்டின் மகளிர் மன்றங்கள் நியாயமான அளவிற்குப் பணியாற்றி வருகின்றன.

இந்த உண்மையை ஜனாதிபதியும், பிரதமரும் கொழும்பில் நடைபெறும் பெண்கள் கருத்தரங்கில் எடுத்துரைத்திருக்கின்றனர்

பெண் ஊழியர்களுக்கு மூன்றுமாத பிரசவ லீவு வழங்க ஜனாதிபதி வழிவகுத்துள்ளார்; அவ்வித லீவு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைபாதிக்குமளவில் பயன்படுத்தலாகாதென்பது எமது கோரிக்கை.

இலங்கை வரலாற்றில் பெண்ணின்பெருமை தனித்துவம் பெற்றமை கருத்தரங்கிலும் மாநாட்டிலும் பேசப்படாதது பெரும் ஏமாற்றம்

கணவன் டாக்டர் ரத்ன ஜோதி சரவணமுத்து அரசாங்க சபைத் தேர்தலில் வெற்றிபெற்றும், தேர்தல் வழக்கில் தோல்வியடைந்ததால், அவருடைய மனைவி திருமதி நேசம் சரவணமுத்து அரசாங்கசபை அங்கத்தவராக (M S C) தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தமிழ்ப் பெண்மணி.

கணவன், பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்ட சமயம் நாட்டின் பிரதமராக, உலகின் முதற் பெண் பிரதமராக வரலாற்றைப் படைத்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

வரலாறு எமது விருப்பு வெறுப்புக்குஇடமளிக்காது; அவற்றை ஒருபுறம்வைத்து இந்தச் சாதனைகள் நினைவூட்டுவதால் மாதர் குலம்மதிப்படையும்.

''ஆயிரம் பெண்களைச் சந்திப்பது இலகுவானது; ஒரு பெண்ணை எதிர்த்து வாதாடுவது கடினமானது'' என்று ஹாஸ்யமாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி பெண்களுக்கு விடுத்த வேண்டுகோள் அவர்களின் மதிநுட்ப சிந்தனைக்குரியது.

தம்முடைய ஆட்சி வெற்றியடைய ஒரு பலம் நிறைந்த பாராளுமன்றம் தேவை என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார்; 'அதனை உதவுங்கள்' என்று கேட்ட அவர் விரைவில் நடைபெறவிருக்கும் பொது ஜன வாக்கெடுப்புக்கு ஆதரவளித்து வாக்களிப்பதே அந்த உதவி'' என்று விளக்கியிருக்கிறார்.

பலமுடைய பாராளுமன்றம் இன்றைய அவசிய தேவை; ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நல்வழிப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் கொண்டசபை அது.

மக்கள் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்வதை விட வேறு வழி எது? பொதுஜன வாக்கெடுப்பு ஜனாதிபதியின் நியமனம் பெற்ற அங்கத்தவர்களையே சபைக்குகொண்டு வரும்.

மாதர் மட்டுமல்லமக்கள் அனைவரும் இதுபற்றி சிந்தித்துதவவேண்டும்.

## மக்கள் கருத்து

## மின் விளக்கு எரியவில்லை

கடந்த சிலநாட்களாக வர்த்தலைவிளானிலுள்ள கணேசையர் வீதியுட்பட மற்றைய வீதிகளிலும் மின்சாரக் கம்பத்திலுள்ளமின்விளக்குகள் எரியவில்லை. ஒரே இருள் மயமாக வீதிகள் காணப்படுகின்றன. மயிலிட்டி கிராமசபையில் முறையிடப்பட்ட ஒரு முறைப்பாடு கவனிக்கப்படாமல் இருக்கிறது. ஒரு வீட்டு மின்சாரத் தொடர்பின் மேல்பாரம் ஏற்றப்பட்டு இருப்பதால் வயர் அறுந்து விழுமோ என்ற அச்சமே அம்முறைப்பாட்டுக் காரணம் உரியவர்கள் இதற்கு உடனடிநடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

சி. உதயகுமார்
வர்த்தலைவிளான்.

# கிராமங்களே தமது தேவையை பூர்த்திசெய்ய வேண்டும்

[யாழ்ப்பாணம்

''கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதில்லை, எனத் தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினரையோ அரச அதிகாரிகளை குறை கூறிக்கொண்டிருப்பதால் மட்டும் கிராமங்கள் அபிவிருத்திப் பாதையில் முன்னேற்றம் காணமுடியாது. கிராமங்கள் தமது தேவைகளை தாமே பூர்த்தி செய்கின்ற நிலை ஏற்பட வேண்டும். இந்த வகையில் கைதடி இளைஞர் அபிவிருத்திக் கழகத்தின் மகத்தான சிரமதானப்பணி பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்'' என்று சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் கைதடி ஊரியான் பகுதியில் நடைபெற்ற மாபெரும் சிரமதானப் பணியினை முடித்து வைத்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

கைதடி மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இப்பணியினை சமாதான நீதவான் திரு. மா. நாகமுத்து மங்கள விளக்கு ஏற்றிவைத்தார்.

மற்றும் கைதடிப் பகுதியில் உள்ள பலபொது ஸ்தாபனங்களும் இப்பணியில் பங்கு கொண்டன. [மா]

# 'தீமைபுரிபவர்களை சமயஉலகு கேவலமாக மதிக்கும்''

(புங்குடுதீவு)

''கடவுள் வணக்கத்தையும் செய்து கொண்டு புண்ணிய யாத்திரைகளும் போய்க்கொண்டு தீமை புரிந்து வாழுகின்றவர்களை சமய உலகு தனது கணிப்புக்குள் கேவலமாகவே எண்ணிக்கொள்ளும். போலிப்பக்தர்களையும், கோவில் வழிபாடுகளோடு மயமையும் வஞ்சனையும் நிறைந்த வாழ்க்கை நடத்துபவர்களை குறிப்பிடுவதற்காகவே 'படிப்பது தேவாரம இடிப்பதுசிவன் கோவில்' என்னும் பழமொழி உருவாகி இன்னும் வழக்கத்திலிருக்கிறது. 'போலி வழிபாட்டாளர்களால் டனிதமான பக்தர்களையும் சந்தேகிக்கும் சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது''.

மேற்கண்டவாறு புங்குடுதீவு வல்லன் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடந்த வழிபாட்டின் போது சிறப்புரையாற்றிய புலவர் ஈழத்துசிவானந்தன் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் ''மனித வாழ்க்கையில் ஆண்டவன் என்ன நினைப்பான் என்று யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. இந்த எண்ணம் எப்பொழுது உண்டாகிறதோ, அப்பொழுதே குழப்பங்களும் குரோத விரோதங்களும் குறைவதற்கு வழிபிறந்துவிடும். பிறருக்கு நல்லது செய்வதையே ஒரு சமய வாழ்வாளன் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். நல்லது செய்ய முடியாது போனல் தீமை செய்யாது இருக்கவாவது தன்னைப் பக்குவப்படுத்தவேண்டும். அழுக்கு மனத்தைத் தூய்மைப்படுத்தவும், பொய்மைப் போக்கினை விலக்கி மெய்மை நோக்கினை உருவாக்கவே திருக்கோவில் வழிபாடுகள் உதவுகின்றன. சிவசின்னங்கள் தரிப்பதும், தூபதீபங்களை வணங்குவதும், திருவிழாக்களை நடாத்துவதும் ஆர்ச்சனை பூசை செய்வது மட்டும் தான் சமயவாழ்வு என முடிவெடுத்துவிடக் கூடாது. கடவுளுக்கு விருப்பமானவற்றை நினைக்கவும் செய்யவும் நம்மைப்பழக்கி எடுப்பதே சமயவாழ்க்கை'' என்று கூறினர்

திருவாளர்கள்: க. அரவிந்தன். ம. குணபாலன் ஆகியோரும் பேசினர்

# தென்னை உற்பத்தி: கமநலசேவைஉதவி

(யாழ்ப்பாணம்)

தென்னை உற்பத்திக்கு வடபகுதி கமநல சேவைத் திணைக்களம் வருடத்துக்கு ஒரு தென்னங்கன்றுக்கு ரூபா 35 வீதம் மானியம் வழங்கவுள்ளது.

தென்னை அபிவிருத்திசபை ஊடாக வழங்கப்படும் இந்த மானியம் முதல் மூன்று வருஷங்களுக்கு வழங்கப்படும்.

அரை ஏக்கர் நிலத்துக்கு மேல் தெங்குப் பயிர்ச் செய்கையை மேற்கொள்பவர்களுக்கும் கடன் நிதி வழங்கவும், கமநலசேவைத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

வடபகுதியிலுள்ள தொகுதிகள் தோறும் இருக்கும் கமநல சேவை நிலையங்களில் தென்னங்கன்றுகள் விபனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இத்தென்னங்கன்றுகள் இரு வருஷத்தில் பலனளிக்கும என திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பத்து தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்பவருக்கே மேற்குறிப்பிட்ட மானியம் வழங்கப்படுமெனவும் அவர் சொன்னர். (மா)

# தற்கொலை

(கிளிநொச்சி)

மனைவி, சிறியதாய் ஆகியோருடன் சண்டைபிடித்த நாலுபிள்ளைகளின் தந்தை ஒருவர் மனமுடைந்த நிலையில் நச்சுத்திராவகத்தை அருந்தி மரணமானர். இவருக்கு பணக்கஷ்டமும் இருந்ததாம்.

உருத்திரபுரத்தை சேர்ந்த எஸ் பொன்னுத்துரை என்பவரின் மரணவிசாரணையில் இத்தகவல் தெரியவந்தது

இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டு தற்கொலை மரணம் என தீர்ப்பு வழங்கினர்.

## பேசாலையில் புதிய பொலிஸ் நிலையம்

[மன்னர்]

பேசாலையில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பேசாலையில் புதிய பொலிஸ் நிலயத்தை அமைப்பதற்கான காணியைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மன்னர் உதவி அரசாங்கஅதிபர் திரு வி. வைரமுத்துமேற்கொண்டுள்ளார்.

ஏனைய நடவடிக்கைகளை மன்னர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன் மேற்கொண்டு வருகிறர்.

## லெபனனில் சிறையிருந்த இலங்கையருக்கு ரூபா 500!

[கொழும்பு]

இஸ்ரேல்—லெபனன் யுத்தத்தின் போது லெபனனில் சிறை வைக்கப்பட்டிருந்த பத்தொன்பது இலங்கையருக்கு தலா 500 ரூபாவை இலங்கை சமூக சேவைகள் அமைச்சு வழங்கவுள்ளது.

இந்த நிதியுதவி இவர்கள் வேலை வாய்ப்புக்களையோ அல்லது வேறு வருமானங்களையோ தேடிக் கொள்ளும் வரை வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. [கி]

# "ஆசிரியர், பெற்றோர் மாணவரின் இயல்பாற்றலை விருத்திசெய்ய வேண்டும்"

### பரிசளிப்புவிழாவில் யாழ். கல்வியதிகாரி உரை

[யாழ்ப்பாணம்]

''ஆசிரியர்களும், பெற்றோர்களும், கல்விமான்களும் மாணவர்களின் இயல்பாற்றலை விருத்தி செய்து அவர்களைப் பொறுப்புள்ள பிரஜைகளாக்க வேண்டும். கல்வி கற்பித்தல் சமூகத்தின் கூட்டுழைப்பிலும், மாணவர்களின் ஊக்கத்திலுமே தங்கியுள்ளது இதனை நாம் அனைவரும் உணர்ந்து செயல்படவேண்டும்.''

இவ்வாறு யாழ். கல்வியதிகாரி திரு. சி. தியாகராசா மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

''ஆசிரியர்களும், பெற்றோர்களும் மாணவர்களின் ஆரம்பககல்வியின் அத்திவாரத்தை உறுதிப்படுத்திஞல் மாணவர்கள் தனியார் ரியூட்டரிகளுக்கு அலைந்து காலத்தையும், பணத்தையும் வீணக்கவேண்டியதில்லை.

''பாடசாலைகளின் தேவைகளுக்கு அரசாங்கத்தைமட்டும் நம்பிக்கையிருக்காது, பெற்றோரும், பொதுநல விருப்பிகளும் கல்வியின் வளர்ச்சியின் முக்கியத்துவங்களை உணர்ந்து உதவ முன்வர வேண்டும்', என்றூர்.

இவ்விழாவுக்கு வித்தியாலய அதிபர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை தலைமை தாங்கினர். வட்டாரக்கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம், திரு. நம. சிவப்பிரகாசம், திருமதி சாம் தம்பு இராசமணி ஆகியோர் உரையாற்றினர்கள். வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ)

# "சாதாரண மனிதனுக வாழ்ந்த தவமுனிவர்"

(யாழ்ப்பாணம்)

''சாதாரண மனிதனுகவே வாழ்ந்து, எந்தளவோ பட்டம் பதவிகள் நாடிவந்தபோதும் அவற்றை ஒறுத்து பெருமை கொள்ளாத வாழ்வு வாழ்ந்த தவமுனிவர்வித்துவசிரோமணி சி.கணேசையா அவர்கள். எவ்வளவு தான் படித்துப்பட்டம் பெற்றவர்கள் பரந்து இருந்தாலும் பண்பான மனிதர்களைக் காண்பது அரிதிலும் அரிது. ஆனல் கணேசையா அவர்கள் பண்பில் மட்டுமல்ல, அறிவு, ஆற்றல், விவேகம் எல்லாவற்றிலும் உயர்ந்த மகாவித்துவானுக விளங்கியவர். அவருக்கு இவ்வர்த்தலை விளான் மக்களின் அன்பும் தொடர்பும இருந்தது மட்டுமல்லாமல் அவரே மக்களோடு எளிமையாகப் பழகும் வாய்ப்பும் இருந்தது என்பதை யாரும் மறக்கமுடியாது''.

வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் நினைவுப்பணி மன்றம் நினைவாஞ்சலி செலுத்துகையில் இம்மன்றத்தின் தலைவரும், கணேசையாவின் மாணவரும், சமாதான நீதவானுமான இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் எடுத்துரைத்தார் வர்த்தலைவிளான் அ. மி. த. க. பாடசாலை மண்டபத்தில் அதிபர் சின்னத்தம்பி தலைமையில் விழா நடந்தது.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;— 'ஒளியுள்ள பொருளுக்குக்கிட்ட நாம் இருக்கும்போது அதன் பிரகாசத்தை நாம் அறிய முடியாது. இப்படித்தான் கணேசையாவின் திறமையெல்லாம் இந்திய மண்ணுக்கு எட்டியதே ஒழிய நமமவர் அவரது நிலையை அறியவில்லை. எனினும் பின்பு ஒரு சிலர் அவரை மதித்துப்போற்றினர். தனது கடைசிக் காலங்களில் எவருமே அறியமுடியாத தவமுனிவனுக வாழ்ந்த கணேசையா இலக்கண, இலக்கியங்களிலும், கவிகளில் ஒட்ப, திட்ப நுட்பம் வாய்ந்தவராகவே விளங்கினர். தனது சொத்துக்களை உற்றூர், உறவினர்களுக்கெல்லாம் ஒப்படைத்துவிட்டு வர்த்தலைவிளான் மருதடி விநாயகப் பெருமான் திருக்கமலங்களே தஞ்சமென வாழ்ந்து நின்ற முனிவர் கணேசையாவை நாம் நினைவு கூறுவதன்மூலம் நாம் ஆத்மதிருப்தியை அடையலாம் என்றூர்.

## தேகப்பயிற்சிப் போட்டி

[கரவெட்டி]

பாடசாலை மாணவர்களுக்கு இடையே அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும தேகப்பயிற்சுப் போட்டி இம் மாதம் 12ம், 13ம் திகதிகளில் குருநாகலியில் நடைபெறவுள்ளது.

## அகண்டநாம பஜனை

(யாழ்ப்பாணம்]

சர்வதேசரீதியில் அகண்ட நாம பஜனை இரு தினங்கள் நடைபெறஉள்ளன. இவ் ஏற்பாடு பகவான் சத்யசாயி பாபாவின் விருப்பத்தினை அடுத்து சகல தேசங்களிலுமுள்ள ஸ்ரீசத்யசாயி சேவா நிறுவனங்கள் நடாத்துகின்றன,

இலங்கையின் வடபகுதியில் சாவகச்சேரி, அளவெட்டி, நல்லூர், அரியாலை, சுண்டிக்குளி சித்தங்கேணி, முத்திரைச் சந்தி, உரும்பிராய், யாழ். நகர் ஆகிய இடங்களிலுள்ள சாயிபாபா நிறுவனங்கள் பங்குபற்றும் அகண்ட நாம பஜனை சேர். பொன். இராமாநாதன் வீதியிலுள்ள யாழ். பகவான் ஸ்ரீ சத்யசாயிசேவா சமத்தியின் புதிய மண்டபத்தில் சனிக்கிழமை மாலை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை மாலை வரை தொடர்ந்து நடைபெறும். (உ]


தித்திக்கும் தீபாவளியை குதூகலமாகக் கொண்டாட

தேன்சுவை கொட்டும் 'றிக்கோ' ஐஸ்கிறீம், மஸ்கட், கேக், இனிப்புப்பண்டங்கள் மற்றும்

தரம் நிறைந்த 'மிக்சர்' வகைகளுக்கு 'றிக்கோ'வை நாடுங்கள்!

யாழ் நகரில் றிக்கோ வுக்கு கிளை இல்லை அசல் றிக்கோ கோப்பியை அரைத்துபெற்றுக் கொள்ள றிக்கோ

பாராளுமன்றத்தில்

இ. கந்தசாமி

# தமிழர் விடுதலைக் கூட்டணி பேசஎழுந்தபோது

# அரசதரப்பிலிருந்து கிடைத்த 'வரவேற்பு'

பாராளுமன்றத்தில் இப்போதெல்லாம் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கென்றாலும் சரி, ஜனாதிபதி, அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கென்றாலும் சரி எதிர்க் கட்சியினர் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர் என்பதை அவதானிக்க முடிகிறது.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமைமுதல் வெள்ளிக்கிழமை வரை நடைபெற்ற சபை அமர்வுகளின்போது எதிர்க் கட்சியினரின் மேற்சொன்ன நிலையை உணரக் கூடியதாக இருந்தது.

சபையில் அரசின் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலத்த கண்டனக் குரல் எழுப்பும்போதெல்லாம் அரச தரப்பிலிருந்து குறுக்கீடுகளும், கூச்சலும் ஏற்பட்டு அமைதியின்மை ஏற்படுகிறது. சபாநாயகர் தலையிடும் வரை அந்நிலை நீடிப்பது கவலைக்குரிய விடயம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது இந்நிலை ஏற்பட்டால் குறுக்கீடுகள், கூச்சல்களுக்கு மத்தியில் "புலி", "கொட்டியா" "குட்டிமணி, ஈழம்' என்ற சொற்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

அதேபோன்று சுதந்திரக் கட்சியினர் பேசியபோது "நக்ஸலைட்" என்ற வார்த்தைப் பிரயோகமும், கம்யூனிஸ்ட் உறுப்பினரானால் "அம்மாவின் தொங்கல் சேலையில் தொங்கிக்கொண்டிருந்த போது..." என்ற வார்த்தைகளும் எழுந்தன

சுதந்திரக் கட்சியின் நலனில் அக்கறை கொண்டவர்கள் போல் சில அரச தரப்பினர் உரையாற்றினர். அக்கட்சியில் இருக்கும் ஜனநாயகவாதிகள் கட்சியின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றுவதற்கு முயன்றுகொண்டிருக்கும் 'நக்ஸலைட்'டுகளுக்குப் பயந்துகொண்டு என்ன செய்வது என்று அறியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என ஒரு கட்டத்தில் அனுதாபப்பட்டார் லலித் அத்துலத் முதலி.

சுதந்திரக் கட்சியினர் மீது பிரதமரி ஜனாதிபதியைக் கொலை செய்ய முயன்றதாக ஒரு குற்றச்சாட்டையும் சுமத்தினார்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஜனாதிபதி அரசியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கொலை செய்ய சுதந்திரக் கட்சியினர் முயன்றனர் என்பதே அவரது குற்றச்சாட்டாகும்.

## குறைகூறுவதைக் கைவிடவில்லை

இன்றைய ஆட்சி பதவிக்கு வந்து ஐந்து ஆண்டுகள்கடந்துவிட்டநிலையில் ஆறுவது ஆண்டில் இருந்துகொண்டு மேலும் ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்வதற்கு மக்களிடம் அனுமதி கோருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற இவ் வேளையிலும்கூட கடந்த 70ம் ஆண்டு முதல் 77ம்ஆண்டு வரை ஆட்சியிலிருந்த அரசின் நடவடிக்கைகளைக் குறைகூறுவதை அரச உறுப்பினர்கள் கைவிட்டபாடாக இல்லை.

அரசியல் அமைப்பின் 4-வது திருத்த மசோதா மீது இடம் பெற்ற விவாதத்தின்போதே கடந்த அரசின் நடவடிக்கைகளும் அவர்களால் உருவாக்கப்பட்ட 72ம்ஆண்டு அரசியல் அமைப்பும் அரசதரப்பினரின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகின.

அரச தரப்பினரின் இப் போக்கை அவதானித்த எதிர்க் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தமது உரையின்போது இதனைப் புட்டுக்காட்டத்தவறவில்லை.

கடந்த அரசையும் அதன் நடவடிக்கைகளையும் கண்டிப்பதனாலும் விமர்சிப்பதனாலும் மக்களுக்கு எதுவிதநன்மையும் ஏற்பட்டுவிடாது என்று அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் பத்திரிகைகளையும், வானொலியையும் ஆக்கிரமித்துக்கொண்ட 'நக்ஸலைட்' என்ற வார்த்தை சபையிலும் அடிக்கடி ஒலித்தது.

'நக்ஸலைட்' தலைவர் யார் என்ற கேள்விக்கும் சபையில் பதில் கிடைத்துவிட்டது. ஆம் நக்ஸலைட் தலைவர் திருமதி சிறிமாவின் மருமகன் விஜயகுமாரணதுங்கா என்றார் அமைச்சர் காமினி திசநாயக்கா.

ஆட்சி நீடிப்பு —

சர்வஜன வாக்கெடுப்பு —

ஐ. தே. க. எம். பி. க்களின் ராஜினாமாக் கடிதம் — ஆகிய விடயங்கள் பற்றி எதிர்க்கட்சியினர் அரசாங்கக் கட்சியினரைச் சாடியபோதெல்லாம், அவர்கள் முக்கியமாகசிரேஷ்ட அமைச்சர்கள் நல்ல பதிலடி கொடுத்தார்கள்.

எதிர்க்கட்சியினர் — அதாவது கடந்த ஆட்சியினர் ஏதாவது விடயங்களில் வினா எழுப்பும்போது—

# 'கொட்டியா' - 'குட்டிமணி'

# அடிக்கடி கூக்குரல்

"நீங்கள் ஆட்சியில் இருந்த போது என்ன செய்தீர்கள்? நாம் அப்போது அது பற்றிக் கேட்டபோது என்ன கூறினீர்கள்? என்பன போன்ற பதில் கேள்விகளை எழுப்புவதுநீண்டகாலமா அரசதரப்பினரின் வழக்கமாக இருந்தது. அந்நிலையைக் கடந்தவார விவாதங்களின்போதும் அவதானிக்க முடிந்தது.

நிதி அமைச்சரின் குட்டி பட்ஜட் (கணக்கு வாக்குப் பண மதிப்பீடு) விவாதம் முக்கியமாக இடம் பெற்றது.

## ரூபாயின் மதிப்பு குறையுமா?

ரூபாயின் மதிப்பு குறைக்கப் படுமா?

ரூபாவின் மதிப்பைக் குறைக்குமாறு உலகவங்கியும், சர்வதேச நாணய நிறுவனமும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்கிறதாமே?

உணவு முத்திரை தொடர்ந்தும் ஏழைமக்களுக்கு வழங்கப் படுமா?

எதிர்க்கட்சியினரால் இக் கேள்விகள் எழுப்பப்பட்ட போது உணவு முத்திரை தொடர்ந்தும் வழங்கப்படும் என்று உறுதி கூறிய நிதி அமைச்சர் ரூபாமதிப்புக் குறைக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்குமாறு அவ்விவகாரத்தை கேள்விக் குறியுடனேயே விட்டுவிட்டார்.

கொழும்பு பணக்காரர்கள் நன்மையடையும் விதத்தில் ரூபா மதிப்புக்கு என்ன நடக்கும் என்று முன்கூட்டியே கூறுவதற்கு நான் ஒரு மடையன் அல்ல என்றும் கூறினார் றொனி.

ஆரம்பம்முதல் கலகலப்போ விறுவிறுப்போ இன்றி நடைபெற்றுக்கொண்டிருந்த புதன் கிழமை விவாதம், கடந்த ஏப்ரலில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டின் மேலதிக செலவினத்தைச் சமாளிப்பதற்கான குறை நிரப்புத்தொகை பிரேரணை மீதான விவாதத்தில் அமைச்சர் செல்லையா இராசதுரை உரையாற்றியதைத் தொடர்ந்து சூடுபிடிக்கத் தொடங்கியது.

மகாநாட்டுக்கு மேலதிக செலவினம் ஏற்பட்டதற்கான காரணங்களை அமைச்சர் விளக்கியதை அடுத்து இந்து கலாச்சார அமைச்சருக்கு நல்ல கலாச்சாரம், நல்ல பண்பு உண்டு. அவரது பண்பாட்டையோ கலாச்சாரத்தையோ நாம் சந்தேகிக்கவில்லை.

உலக இந்து மகாநாட்டை அவர் சிறப்பாக நடத்திமுடித்திருக்கிறார் நாம் அதனைமறுக்கவில்லை என்று பெரும் பீடிகையுடன் தமது பேச்சை ஆரம்பித்த வவனியா சிவசிதம்பரம் அந்த மகாநாட்டை இந்துக்கள் தேவாரம் பாடம்பெற்ற திருமலையில் நடத்துமாறு அழைப்புவிடுத்தார்கள் என்றும் அமைச்சர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அத்துடன் நின்றுவிடவில்லை;

தொடர்ந்தும் அமைச்சர் மீது பல குற்றச்சாட்டுக்களை வரிசையாக அடுக்கிக் கொண்டே போனார்.

## இராசுவின் 'கணக்கு'

இந்து மகாநாடு முடிந்து பல மாதங்கள் கடந்து விட்ட போதிலும் மகாநாட்டுகணக்கு அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

தமிழ்மொழி அமுலாக்கலுக்கென ஓர் அமைச்சை அரசு நிறுவி 4 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் அதுதொடர்பான சுற்று நிருபம் கூட இன்னமும் வெளியிடப்படவில்லை.

இதே குற்றச்சாட்டுக்களை எதிர்கட்சித்தலைவரும் அமைச்சர் மீது சுமத்தினார்.

மகாநாட்டின் போதுஉணவு வாங்கிய கொழும்பு ஹோட்டல் ஒன்றுக்குஇன்னும் பணம் கொடுக்கப்படவில்லை எனத் தாம் கேள்விப்பட்டதாக நல்லூர் சிவா கூறினார்.

இந்து சமய மேம்பாட்டுக்காக எதுவும் செய்யத் தயாராக உள்ள தமிழக இந்துக்களும் இம் மகாநாட்டுக்கு பண உதவி செய்திருக்கிறார்கள்.

மகாநாட்டு கணக்கு விபரம் இன்னமும் வெளியிடப்படவில்லையே என்று அண்மையில் தமிழகம் சென்றபோது அங்குள்ள சிலர் கூறியதைக் கேள்விப்பட்டேன். எனவே அவர்களும் அறியக்கூடியதாக மகாநாட்டுக் கணக்கு அறிக்கை வெளியிடப்படவேண்டும் என்றும் தெரிவித்த வவனியா சிவா, அமைச்சர்மீதுஇம்மியளவும் தனக்குச் சந்தேகம் இல்லை என்றும் சந்தேகப்பட்டுத்தான் கணக்குக் கேட்கவில்லை என்றும் தெரிவித்தார்.

நீதி அமைச்சர் தமது பேச்சை உன்னிப்பாக அவதானிப்பதையும் ஏதோ பேச விழைவதையும் கவனித்து விட்டு தமது உரைக்கு மத்தியில் இரு தடவைகள் அதனைச் சுட்டிக்காட்டினார். வவனியா சிவா.

இவரை அடுத்து திடீரென எழுந்த நீர்கொழும்பு எம். பி. டென்சில் பெர்னாண்டோ "நீர்கொழும்பில் உள்ள மாரியம்மன் கோயிலை அபிவிருத்தி செய்ய அமைச்சர் இராசதுரையிடம் 25 ஆயிரம் ரூபா கேட்டேன். அவர் 50 ஆயிரம் ரூபா தந்தார் என்று தமிழில் பேசிய போது சபையில் சிரிப்பு எழுந்தது. தொடர்ந்து நீதி அமைச்சர் நிஸங்கா விஜயவர்த்தன "எமது நாடு சுதந்திரம் பெற்றபின் தமிழ் மொழிக்கும் தமிழ் கலாச்சாரத்துக்கும் என ஒரு விசேட அமைச்சை நிறுவிய பெருமை ஐ. தே. க. அரசுக்கும் ஜனாதிபதி ஜே. ஆருக்குமே சாரும்" என்ற பழைய பல்லவியுடன் தமது பேச்சை ஆரம்பித்து அமைச்சர் 'இராசு'வுக்காக ஆஜரான வக்கீல் போன்று வாதாடினார்.

## சாவகச்சேரி தாக்குதல்

தமிழ் மக்களுக்கும் இந்துக்களுக்கும் சிறந்த சேவை புரியும் நோக்குடனேயே 'இராசு' அரசுடன் சேர்ந்தார் என்றும் கூறிய அமைச்சர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதல் பற்றி பிரஸ்தாபிக்க விரும்பி "அண்மையில் சாவகச்சேரியில் ஒரு காளி பூசை நடந்திருக்கிறது" என்று தெரிவித்தார். எனினும் அவ்விவகாரம் சூடுபிடிக்கவில்லை. அவரது இவ் வார்த்தைகளுடனேயே மறைந்துவிட்டது.

இவ்வேளை குறுக்கீடுகள் கூட்டணியினர் பக்கம் இருந்து எழுந்தன.

அமைச்சர் 'இராசு'வுக்காக வாதாடச் சென்ற நிஸங்கா எடுத்துப்பேசிய எதிர்க்கட்சித் தலைவரிடம் முறையாக வாங்கிக்கட்டினார் என்றே கூறலாம்.

நீதி அமைச்சர் ஒரு வக்கீல் அல்ல; வெறும் நிர்வாகஸ்தரே. அப்படியிருந்தும் அவர் பிராந்திய அமைச்சருக்காக இங்கு வாதாட வந்து விட்டார். பௌத்த தலைவர் ஒருவர் இந்து சமய பாதுகாவலராக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எனினும் கழுதை ஒருநாயின் வேலையைச் செய்யக்கூடாது என்பதை அவர் உணரவேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் கூறியபோது கூட்டணி எம். பிக்கள் தமக்குள் சிரித்துக்கொண்டனர்.

## ஆடம்பர ஹோட்டலில் சாதுக்கள்

மடாதிபதிகளையும் சாதுக்களையும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இருத்தி மகிழ்விப்பதை விட இங்கு அழிந்த நிலையில் கூரை இல்லாதிருக்க ஆலயங்களைக்கட்டுவித்து அவற்றுக்கு கூரை போடுவது மேல் அல்லவா? என்று கேள்வி எழுப்பிய அமிர் தமது கூற்றுக்கு ஆதாரமாக தமிழில் ஒரு பழமொழியையும் கூறுகிறார்.

"பெற்றதாய் கிண்ணிப் பிச்சை எடுக்க தம்பி கும்பகோணத்தில் ஆயிரம் பிரமாணர்களுக்குத்தானம் செய்தானாம்" இப்பழமொழியை அவர் ஆங்கிலத்திலும் எடுத்து விளக்கினார்.

அகழ்வாராய்ச்சிகள் மூலம் வடக்கு மாகாணங்களில் கூட பௌத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கை முழுவதிலும் பௌத்த மன்னர்கள் ஆட்சி செய்தார்கள் என்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது, என்றுஅடுத்துப்பேசிய ரத்தோட்டை எம். பி. கவிரத்தின, கூட்டணினரைப் பார்த்து எந்த அடிப்படையில் தமிழ் ஈழம் அமைக்கப் போகிறீர்கள்? என்றார்.

சரித்திரம் தெரியாத ரத்தோட்டை எம். பி. ஏதோ வெல்லாம் அதற்கு பதில் அளிக்கவிரும்புகிறேன் என்று எழுகிறார் பட்டிருப்பு கணேசலிங்கம்.

இலங்கை முழுவதிலும் தமிழர்களின் ஆதிக்கம்இருந்தமையினாலேயே பொலனறுவையிலும் ஒரு சிவன் கோவில் இருக்கிறது. இலங்கை எங்கும் தமிழர் ஆதிக்கம்இருந்தபோது இந்தியாவிலிருந்து இலங்கை வந்த மணிமேகலை இங்கு பௌத்தத்தைப் பரப்பினார் என்ற தமது வாதத்தை முன்வைத்த 'கணேசு', தமிழ்மக்கள் எந்த நோக்கத்திற்காகப் பாராளுமன்றம் அனுப்பினார்களோ அந்த நோக்கத்திற்காக அதாவது 'தமிழ்ஈழம்' ஒன்றை அமைப்பதற்காக நாம் பாடுபட்டு வருகிறோம் என்றும் கூறினார்.

குட்டிமணி எனப்படும் யோகச்சந்திரனுக்கு எதிரான சிலவழக்குகளில் ஆஜராகும்சட்டத்தரணி என்பதற்காகவோ என்னவோ நல்லூர் சிவா பேச எழுந்ததும் அரசதரப்பிலிருந்து 'குட்டிமணி' என்ற ஒரு குரல் ஒலித்தது. அவர் உரையாற்றியபோதும் பிராந்திய அமைச்சர்மீது குற்றச்சாட்டுக்களை வாரி இறைத்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் பதிலளித்த அமைச்சர் இராசு, நீண்ட சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார்.

## இராசுவின் பதில்

இந்து மகாநாட்டுக்கு எதிர் பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை என்று கவலையோடு தமது பேச்சை ஆரம்பித்த இராசு, உலகின் 40 நாடுகளில் வாழும் 100 கோடி தமிழர்களுக்கும் உலக இந்து மகாநாடு எழுச்சியையும் உத்வேகத்தையும் புதிய சக்தியையும் கொடுத்திருக்கிறது.

இந்த மகாநாட்டை நடத்துவதற்கு காரணகர்த்தாவாக இருந்த எமது ஜனாதிபதியையும் அரசையும் இந்துசமயத் தலைவர்கள், முனிவர்கள், ரிஷிகள் நடமாடும் தெய்வங்கள் மட்டுமல்ல பல்வேறுநாடுகளில் வாழும் தமிழ்மக்களும் பத்திரிகைகள் மூலமாகவும் நேரிலும் பாராட்டியுள்ளார்கள் என்று கூறிய அமைச்சர் 'கல்கி' இதழில் மகாநாடு குறித் விமர்சனத்தையும் வேறுபலர் ஜனாதிபதியையும் அரசையும் மகாநாட்டையும் பாராட்டி எழுதிய சில கடிதங்களையும் சபையில் வாசித்துக் காட்டினார்.

பௌத்த, இஸ்லாமிய சர்வதேச மகாநாடுகளை நடத்தினார்களே இங்கு பௌத்த தலங்கள், பள்ளிவாசல்கள் எல்லாமே சீராகக் கட்டப்பட்டுள்ளனவா?

[7-ம் பக்கம் பார்க்க]

**றீகல்** [யாழ். நகர்]
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
**முரட்டுக்காளை**
[கலர்]

16–11–82 வரை
**வெஸ்லி**
(மானிப்பாய்) தினசரி 6–15 9–15, சனி, ஞாயிறு 2–30
எம். ஜி. ஆர்–ஜெயலலிதா
**ரகசியப் பொலிஸ்-115**
(கலர்–புதியபிரதி)

**மனோகரா** யாழ் நகர்
தினசரி 4 நாட்சிகள்
**அழகே உன்னை ஆராதிக்கிறேன்**
(வயதுவந்தவர்க்கு)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–காஞ்சனா
**காதலிக்க நேரமில்லை**
(புதிய பிரதி) (கலர்)

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
**ராஜா** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
**மௌன கீதங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்! பாக்கியராஜ்


# தமிழர் விடுதலைக்கூட்டணி ...

(6–ம் பக்கத் தொடர்ச்சி

அம்மகாநாடுகளின் கணக்குகளை யாராவது கேட்டார்களா? இதுபோன்ற கேள்விகளையும் எழுப்பிய அமைச்சர் சதிகாமம் இராமகிருஷ்ண மிஷன் மடம் சுவீகரிக்கப்பட்டதற்கு தமது அரசு 10 லட்சம் ரூபா நஷ்டஈடு கொடுத்ததாகவும் யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் ஞபகார்த்த மண்டபம் அமைக்க 25 லட்சம் ரூபா கொடுத்ததாகவும் கதிர்காமத்தில் இந்து யருத்திரிகர்கள் தங்க 50 லட்சம் ரூபா செலவில் படம் ஒன்று அமைக்கப்படுததாகவும் திருக்கேதீஸ்வரத்திற்கு மகாபலி புரத்தில் திருப்பதி ஆலயத்தின் உதவியுடன் கல்தூண்களைச் செய்விப்பதற்கு தமிழக அமைச்சர் வீரப்பனுடன் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ததாகவும் தமது சாதனைகளைக் கூறிய அவர் இன்றைய அரசு இந்துக்களைக் கௌரவிக்கிறது என்ற கூற்றுடன் தமது உரையை முடித்தார்.

## சர்வாதிகாரம் இப்பொழுதே வந்திருக்கிறது

''சர்வாதிகாரம் இப்பொழுதே வந்திருக்கிறது'' என்றதலைப்புடன் ஒரு ஆசிரியத் தலையங்கத்தை எழுதி பிரசுரத்திற்கு தயாராக இருந்தவேளையிலேயே 'அத்த' பத்திரிகை 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. இது பாட்டாளிகளின் பத்திரிகை இந்தப்பத்திரிகையை வெளியிட முடியாதமையினால் அரசாங்கத்திற்கு எதிரானவர்களின் கருத்துக்களை வெளியிட வாய்ப்பில்லாமல் போகிறது. இன்றைய பிரதமர் அன்று எதர்க்கட்சியிலிருந்த போதுகூட அவரது கருத்துக்களை இப்பத்திரிகையே வெளியிட்டுவந்தது எனவே அப்பத்திரிகை மீண்டும் வெளிவர வேண்டும்,

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது கலவானை சரத் எழுப்பிய கோரிக்கை இது ''ஜனாதிபதி ஜே. ஆரின் சர்வாதிகாரம் எதிர்காலத்தில் வரும் என சொன்னாலும் அது இப்போதே வந்திருக்கிறது ஜே. ஆரும் ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் போக்கையே பின்பற்றுகிறார் — '' 'அத்த' பத்திரிகையின் அந்த ஆசிரியர் தலையங்கத்தில் உள்ள சிலவரிகளையும் சரத் வாசித்துக்காட்டுகிறார்.

இப்பிரேரணைமீது கலவான எம். பி. பேசிக்கொண்டிருந்த போதும் அரசு தரப்பிலிருந்து குறுக்கீடுகள் இருந்தன.

வியாழனன்று இடம்பெற்ற அரசியல் அமைப்பின் 4–வது திருத்தம் மீதான விவாதம் எதிர்பார்த்தபடி சுவையாகவும் சூடாகவும் இருந்ததோடு அதிகாலை 2 மணி வரையும் நீடித்தது.

நடுநிசியில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பத்திரிகையாளர் கலைவிடகலரியில் ஒரிருவரே காணப்பட்டனர். சபையிலும் சில எம். பிக்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். எம். பிக்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது. எனினும் அதிகாலை 1 55 மணிக்கு பிரேரணை வாக்கெடுப்புக்கு விடுவதற்காக மணி அடிக்கப்பட்டதை அடுத்து கூட்டணி எம். பிக்கள் தவிர ஏனைய எம். பிக்கள் சபையை நிறைத்துக் கொண்டனர்.

## கூட்டணியும் தயார்!

ஒரு கட்டத்தில் எமது தலைவர் எப்மிடமிருந்து அரை மணித்தியாலத்தில் எமது ராஜினாமாக்கடிதங்களைப் பெற்றார். உங்களால் அவ்வாறு செய்யமுடியுமா? என அரசு தரப்புயின் வரிசையிலிருந்து கேள்வி எழுந்தது.

நாமும் ராஜினாமாச் செய்யத்தயராக இருக்கிறோம் என கூட்டணி எம பிக்கள் எல்லோரும் ஒருமித்து கூறுகிறார்கள்.

கூட்டணி பாராளுமன்றக் குழுகூடி எம். பி. பதவியை நாம் எல்லோரும் ராஜினாமாச் செய்வதென முடிவு செய்துவிட்டோம் என அமிர் கூறியதும் சபையில் எழுந்த குறுக்கீடுகள் தாமாகவே தணிந்து விட்டன.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட ஜனாதிபதிஏன்தான். ஆட்சியை நீடிக்க விரும்புகிறாரோ தெரியவில்லை என்றும் குறிப்பிட்ட 'அமிர்'

ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது:– அரசியல் அமைப்புக்கு எதிராக அதிகாரமும் துர்பிரயோகம் செய்யப்படுகிறது. இந்நிலை தொடருமானால்பாராளுமன்ற முறைக்குப் புறம்பாக ஆட்சியைக் கைப்பற்றமுயற்சி இடம் பெறலாம் என்ற எச்சரிகையையும் விடுத்தார்.

திருமதி ஸ்ரீமாவின் உரிமை 6 ஆண்டுகள் பறிக்கப் பட்டுவ்ளன, ஆனால் மக்களின் உரிமைகள் 12 ஆண்டுகள் பறிக்கப் பட்டுள்ளன ஒன்று குறைபட்டுக் கொண்டார் அத்தனகலை லஷ்மன் ஜயக்கொடி.

## புதுக்'கதை'

ஜனாதிபதி தேர்தலின் பின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களைக் கொலைசெய்ய சதி செய்யப்பட்டதாக இப்போது 'கதை' ஒன்று பரப்பப்பட்டிருக்கிறது

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது 83–ம் ஆண்டுக்கு முன் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று ஜனாதிபதி சொன்னரே இப்போது என்ன சொல்கிறீர்கள்.

இவையும் சரத்தின் குற்றச்சாட்டுக்கள்.

இறுதியில் எதிர்க்கட்சியினரின் கருத்துக்கள் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் பிரதமர் நல்ல பதிலடி கொடுத்தார். 1–55 மணியளவில் வாக்கெடுப்பு நடைபெற்று 138 வாக்குகளால் திருத்தச்சட்டமூலம் நிறைவேறியது.

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 26–ம் திகதி
வெள்ளிக்கிழமை
(12—11—82)

மேடம்; ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் முடியலாம். பூமிப் பிணக்கால் நஷ்டத்திற்கு இடமுண்டு சிலர் உஷ்ணரோகங்களுக்கும்இலக்காகலாம். உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும்.

இடபம்: பொதுத் துறையில் அதிக மனநாட்டம் செலுத்துவீர்கள் சிலர் அரசியல் துறையிலும் அடியெடுத்து வைக்கலாம். பெரியவர் ஒருவருடைய அறிவுரைகள் முன்னேற்றத்தைத்தரும். நல்ல நாள்.

மிதுனம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல்பொறுமையுடன் நடந்து கொள்ளவும், தொழில் விடயத்தில் முன்னேற்றம் காணலாம்.

கடகம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவுகிடைக்கும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விஷயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத் தரும்.

சிங்கம்: சிந்தனையின் தாக்குதல் உடல் நிலையைப் பாதிக்கும். மனதில் அவமதி குன்றும் திடீர்முடிவுகளைத்தவிர்த்துக்கொள்ளவும். தொழில் துறைகளிலும் தொல்லைகளுக்கும் இடமுண்டு.

கன்னி: ஆசை வார்த்தைகளின்மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்குச் சிலர் முனைவார்கள். இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். நிதானம் விரும்பத்தக்கது.

துலாம்: அடக்கமான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். முதியவர் ஒருவர் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார் இறை நம்பிக்கை மேலோங்கும்.

விருச்சிகம்: எதிலும்அவசரப் போக்கை கடைப்பிடிப்பீர்கள். தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும். பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை தோன்றலாம். அடக்கம் நன்று.

தனு: கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள்போற்றப்படுவார்கள். வாகனச்சொந்தக்காரர்களுக்கு நல்ல நாள்.

மகரம்; இதயத்தில்மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர் புத்திர சுகத்துடன் தொழில் துறையிலும் வெற்றியும் கிடைக்கும் சுப தினம்.

கும்பம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். சிநேகிதர் வழியால் கவலைகள்தோன்றக்கூடும். எதிலும் தாக்க மனப்பான்மை தோன்றக் கூடும் மனத்திடம் வேண்டும்.

மீனம்: குளுமையான சம்பவங்கள் இடம்பெறும் வாழ்க்கையில் பசுமை தோன்றும். களஸ்திர வழியால் இலாபமும் கிடைக்கும் பொன் பொருள் வரவுக்கும் இடம் உண்டு.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## இன்று பாராட்டு

(யாழ்ப்பாணம்)

நாதஸ்வரக் கலைஞர் நா. க. பத்மநாதன் ஜனாதிபதி விருது பெற்றமை குறித்து பாராட்டு விழா இன்று பிற்பகல்பன்னாலை வரத்தலம் கற்பவிநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ. இ. சபாரத்தினக்குருக்களின் ஆசியுடன் தொடங்கும்இவ்விழாவில் திருவாளர்கள் சி. சின்னத்தம்பு, கா. கதிர்காமத்தம்பி, வை. பொன்னையா, பொன். தெய்வேந்திரன், கி. காசிப்பிள்ளை சொ. சண்முகலிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்க உள்ளார்கள்.

## மக்கள்

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

கிலேய புரட்டஸ்தாந்து கிறிஸ்தவமதத்தைச் சேராத கிறிஸ்தவ மதப் பிரிவுகளின் குருமார்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதில் ஸ்கொட்லாந்து கிறிஸ்தவ மதகுருமார்களும், அயர்லாந்து கிறிஸ்தவ மத குருமார்களும், கத்தோலிக்க கிறிஸ்தவ மத குருமார்களும் மக்கள் சபையிலும் பிரபுக்கள் சபையிலும் அங்கத்துவம் அளிக்கப்படவேண்டுமென கோரி மகஜர் கையளித்துள்ளனர். (உ)

## மறவன்புலோ சனசமூக நிலைய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ மேற்கு சனசமூக நிலையத்தின் மாதாந்த நிர்வாக சபைக்கூட்டம் நிலையத்தலைவர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

விஜயதசமியன்று கலைவிழாவின் காலை நிகழ்ச்சிகளான சிறுவர்களுக்கு ஏடு தொடக்குதலும் 'பாலர்' பாடசாலை தொடக்குதலுமான நிகழ்ச்சிகளும், மாலை நிகழ்ச்சிகளான கலைநிகழ்ச்சிகளும். சிறப்பான முறையில் நடைபெறுவதற்குப் பலவழிகளிலும் உற்சாகத்துடன் ஒத்துழைப்புக் கொடுத்த சகல நிர்வாகஸ்தர்களுக்கும் உறுப்பினர்களுக்கும, அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இப்படியான ஒன்றுபட்ட இலட்சியங்களுடனேயே இந்நிலையத்தின் சகல முயற்சிகளையும் தொடர்ந்து திறம்படச் செய்து நிலையத்தைச் சிறப்படையச் செய்யவேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையத்தின் துரித நடவடிக்கைகள் காரணமாக மறவன்புலோ மேற்கும் இதைச் சார்ந்த பகுதிகளும் தொடர்புள்ள சகல ரோட்டு வசதிகளையும் கிராமோதைய சபை மூலம் சீரமைப்பதற்கு வழிகோலப்பட்டுள்ளது. கலைகலாச்சார, சமய வளர்ச்சிகளுக்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது,

## பொது வீதிகளில் குப்பை கூழம்

(கரவெட்டி]

யாழ், மாவட்ட அபிவிருத்தி சபை நெல்லியடி உபஅலுவலக வீதிகளில் குப்பை கூழங்கள் நிறைந்து காணப்படுகிறது.

ஏழு வட்டாரங்களைக் கொண்ட இவ் உப அலுவலக வீதிகளில் நாளார்தம் சேகரிக்கப்படும் குப்பை கூழங்கள் வீதி ஒரங்களில் குவிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை அகற்றுவதில் காலதாமதமும் ஏற்பட்டுவருகிறது.

தற்போது மழை பெய்து வருவதால் தேங்கிக்கிடக்கும் குப்பை கூழங்கள் மழையில் அழுகி அசுத்தமடையும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சுகாதாரத்திற்குகேடு ஏற்படுமோ என்று பொதுமக்கள்அச்சம் அடைந்துள்ளனர்.


தித்திக்கும் தீபாவளித் திரைவிருந்து!
**சாந்தி-** யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
இன்று குதூகல ஆரம்பம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். வழங்கும்
**நவரத்தினம்**
A. P. நாகராஜனின் வண்ணப்படைப்பு

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
**ரயில் பயணங்களில்**
(கலர்)

கடைசி வாரம்
**லிடோ** [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
**லவகுசா**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10–30, 4–30, 7–00, 9–30 சனி, ஞாயிறு 2–00
**THE ARENA**

**ராணி** தினசரி 10–30, 2–30, 6–00, 9–30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
**என்னைப்போல் ஒருவன்**

**WINDSOR** (Jaffna) Daily 5 Shows
**'RISE AND FALL OF IDI AMIN'**
Murder, Rape and Torture — More than 500,000 people brutally murdered during IDI AMIN'S Rule———
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்———
உகண்டா ஜனாதிபதி இடி அமினின் எழுச்சியும் வீழ்ச்சியும்--

## காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில்

# பரீட்சார்த்தமாக நடந்த தாக்குதல் ஒத்திகை!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் பரீட்சார்த்தமாக தாக்குதல் ஒத்திக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸ் நிலையத்தை இராணுவத்தினர் தாக்குவதற்கு வர பொலிசார் அதை எதிர்த்து நின்று பொலிஸ் நிலையத்தை காப்பாற்றிக் கொள்வது போன்ற இந்த ஒத்திக்கை இடம் பெற்றது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளின்படி பொலிசார் தயார்நிலையிலிருந்த சமயம் இராணுவத்தினர் தாக்குதல் நபர்கள்போல் இங்கு திடீரென வந்துசேர்ந்தனர். துப்பாக்கி வெடிச்சத்தங்கள் பலமாகக் கேட்டன. இப்பரீட்சார்த்த ஒத்திகையின் மூலம் பொலிசார் தாக்குதல்காரர்களை எவ்வாறு எதிர்த்துப் போராடலாம் என்பதை அறிந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

துப்பாக்கிகளின் வெடித்த சத்தம் கேட்டபோதும் அவற்றிலிருந்து குண்டுகள் வெளிவராத முறையிலேயே அவை இயக்கப்பட்டன

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டு பொலிஸ் நிலையத்திற் கருகாமையில் வசிப்பவர்கள் பரபரப்படைந்து ஓடி ஒளித்தனர். பின்னரே இப்பரீட்சார்த்த ஒத்திகை பற்றித் தெரியவந்தது சுன்னாகம் பொலிஸ்நிலையத்திலும் இப்படி ஒத்திகை நடந்தது

## இப்படியும் நடக்கிறது

உருசி வேறுபடும் என்பார்கள்.

சிலருக்கு மது; சிலருக்கு மாது; சிலருக்கு மாமிசம். ஆனால் இம் மூன்றையும் 'ருசி' பார்ப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்!

இந்தியாவின் ஒரு மாநிலமான மத்தியப்பிரதேசத்தில், ராய்ப்பூர் எனும் கிராமம் இருக்கிறது இக்குக் கிராமத்தில் வாழும் சுமார் அறுநூறு பேர் (மொத்த சனத்தொகையே இது தான்!) மதுவும் இல்லை, மாற்றான் மாதுவும் இல்லை மாமிசமும் இல்லை! எதனையும் 'ருசி' பார்க்காமல் எளிய வாழ்க்கை வாழுகின்றனர்!

மூக்கில் விரலை வைக்காதீர்கள்; இன்னும் ஒரு விஷயம் உண்டு.

பல ஆண்டுகளாக இம்மக்கள் இவ்விதம் உலகுக்கு உதாரண புருஷர்களாக வாழ்ந்து வருகிறார்கள்!

ஊடுருவி

# மாண்டவர் தொகை 306 ஆக அதிகரிப்பு!

புதுடில்லி, நவ. 11

குஜராத் மாநிலத்தில் வீசிய கடும் புயலுக்குப் பலியானவர்களின் தொகை 306 ஆக உயர்ந்துள்ளது.

புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சோதுமை, மண்ணெண்ணெய், உணவுப் பார்சல்கள் இப்பகுதிகளுக்கு ட்ரக்குகளில் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அப்பகுதிகளுக்கு உடனடி உதவி வழங்குவதற்காக மத்திய அரசாங்கம் 1 கோடி 4லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (வெ)

## தொழிலாளர் நன்மை கருதி கிராமிய வங்கி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், அதன் தொழிலாளர்களின் நன்மை கருதி 'கிராமிய வங்கி' ஒன்றை அமைக்கவுள்ளது

1983-ம் ஆண்டு தொடக்கம் இக்கிராமிய வங்கி இயங்கத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.எம்.பி....

(1-ம்பக்கத் தொடர்ச்சி]

வேலைகளுக்கு தலா ஒரு லட்சமும் எம். பி க்களின் சம்மதம் பெறுமல் திட்டமிடல் பகுதியினர் தமது விருப்பப்படி ஒதுக்கியுள்ளார்களாம்.

இதுசம்பந்தமாக இம்மாதம் 16ம திகதி நடைபெறவிருக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் விவாதிப்பதற்கு, அபிவிருத்திச்சபை உறுப்பினர் ஒருவர் பிரேரணை ஒன்றைக்கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. மா)

## சோவியத் அதிபர் மறைவு:

# ஜனாதிபதி, பிரதமர் அனுதாபச் செய்திகள்!

(கொழும்பு)

சோவியத் ஜனாதிபதி பிரஷ்நெவ் மரணம் குறித்து இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன சோவியத் உயர் தலைமைப்பீடத்திற்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பிரதமர் திரு ஆர். பிரேமதாசாவும் அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார்.

சோவியத் ஜனாதிபதி மறைவையொட்டி இன்றும் நாளையும், மரணச்சடங்கு நடைபெறும் தினமும், அரசாங்கக் கட்டடங்களில் தேசியக் கொடியை இரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

உலகின் ராஜதந்திரிகளில் ஒருவரும், சோவியத் தலைவரும், இந்தியாவின் நண்பரும் மறைந்துவிட்டார் என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அனுப்பியுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்திருந்தார். பாரத ஜனாதிபதியும் தமது அனுதாபத்தைத் தெரிவித்திருந்தார்.

## வேலைகள் துரிதம்

(சுன்னாகம்)

வேலணை மேற்கு திருவள்ளுவர் வீதிக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. இம் முயற்சியில் வேலணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிரமதானம்மூலம் உதவ புரிந்துள்ளனர். இவ் வீதிகு மின்சார விநியோகம் செய்யுமாறு இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்.

## சோவியத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலமான செய்தி 24 மணி நேரம் கழித்து சோவியத் வானொலியிலும், தொலைக்காட்சியிலும், அறிவிக்கப்பட்டது. சோவியத் தொலைக் காட்சியில், ஜனாதிபதி பிரஷ்நெவின் உருவப்படத்தை காட்டியபின்னர், அவரது மரணச்செய்தி அறிவிக்கப்பட்டது.

1964ம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவரான இவர் வெளிவிவகாரங்களை புதிய விதத்தில் அணுகினார். கடற்படையை நவீனமுறையில் மாற்றி அமைக்க முயற்சி எடுத்தார். சோவியத் படை பலத்தை, அமெரிக்க படைபலத்திற்கு சமமாக்கிக்கொண்டவர் பிரஷ்நெவ் என்பது குறிப்பிடத்தக்கது.


★ வெளிநாட்டுப் பயணமா?

யாழ்ப்பாணத்திலேயே குறைந்த கட்டணத்தில் எந்த நாட்டிற்கும் விரும்பிய விமானத்தில் செல்ல

★விமான டிக்கட்டுகள்

★பிரயாண காசோலைகள் (AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

மக்கினென் டிறவல்ஸ் லிமிடட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

த. பெ. எண் 92, தொலைபேசி: 24154


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் நல்லதம்பி

பொன்னம்பலம் நல்லதம்பி காலமானார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகநாதன் லிகிதர், கடற்படை, திருகோணமலை), காலஞ்சென்ற இரத்தினசிங்கம், மகாலிங்கம் மகான்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வனசமலரின் மாமனாரும், பிரமிளா, சகிலா, நிகிலா, ஆகியோரின் பேரனாரும் ஆவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் கணக்க மடத்தடியில் நடைபெறும்.

10/2, சிவன்கோயில் ரோட், திருநெல்வேலிதெற்கு, யாழ்ப்பாணம்.

5137

## மரண அறிவித்தல்

### அளவெட்டி வேலுப்பிள்ளை இராசா

வேலுப்பிள்ளை இராசா (Rtd. Tea Maker Watagula Estate) காலமானார். இவர் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், பாலேந்திரா (புகையிரத நிலைய அதிபர் யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி, இராஜயோகமணி, கெங்காதேவி ஆகியோரின் அருமைத் தந்தையும், பரமேஸ்வரி (ஆசிரியை யாழ். சிங்கள மத்திய மகாவித்தியாலயம்), சிவகுமார் (புள்ளிவிபர அதிகாரி, திறைசேரி] ஆகியோரின் அன்பு மாமனாரும், சார்மிளா, திவாகர் ஆகியோரின் அருமைப்பாட்டனுமாவார் அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று வெள்ளிக்கிழமை (12-11-82) காலை 10 மணியளவில் மல்லாகம் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

'இராஜவில்லா', மல்லாகம்.

5138


தீபாவளிபண்டிகை சிறப்புற..

சகல மரத்தளபாடங்கள்- 'ஆர்பிக்கோ' மெத்தைகள், 'குஷன்' செற்றிகள்

விசேட கழிவு! விரையுங்கள்!!

டில்கா பேணிச்சர் பலெஸ்

234-236, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். போன்:24186




இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 10(236/81. Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.